REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 12 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன் 91

வரு. 92 இல. 62 | Tuesday 12, March, 2024 | 16பக்கங்கள் | 50/-




# வெளிப்படைத் தன்மையுடன் IMF உடனான நடவடிக்கைகள்



## எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

## நிதியத்தின் முன்மொழிவுகள் குறித்து எதிரணியினருக்கு அரசு தெரியப்படுத்தும்

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் கலந்துகொண்டார். சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலில் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களை எட்டுவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இங்கு வலியுறுத்தப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தினால் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு தரவுகளுடன் கூடிய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென, இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பான தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாராளுமன்றத்துக்கும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதே அரசாங்கத்தின் விருப்பம் என தெரிவித்த ஜனாதிபதி, இந்த முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியத்துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து, இவ்வேலைத்திட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள், வர்த்தக கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன இங்கு விரிவான விளக்கமளித்தார். இந்த பேச்சுவார்த்தை சுற்றுக்களை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகைத் தீர்ப்பு தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை

06

## புதிய வாகனப் பதிவுகள்; 23.3 வீதத்தால் அதிகரிப்பு

### 23,698 வாகனங்கள் 2023 இல், புதிதாக பதிவு

லோரன்ஸ் செல்வநாயகம்



வாகனப் பதிவுகள் அதிகரித்து வருவதுடன் 2022ஆம் வருடத்துடன் ஒப்பிடும்போது கடந்த வருடம் புதிய வாகன பதிவுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த 2023 ஆம் ஆண்டில் ஜனவரி மற்றும் நவம்பர் மாதங்களுக்கிடையில் புதிய வாகன பதிவுகள் 23.3 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதற்கிணங்க கடந்த 2022 ஆம் ஆண்டில் 19,218

06

## ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவன கடனில் 510 மில். டொலர் செலுத்தப்படும்

### ஆறு மாதங்களுக்குள் மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீ லங்கன் விமான சேவையின் நிதி முன்னேற்றம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவ்வாறின்றேல், சுமார் 6000 ஊழியர்களின் தொழில்களுக்கு பாதிப்பு ஏற்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். துறைமுக கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட பேச்சுவார்த்தையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு இணங்க ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் வங்கிகள் மற்றும் சில நிறுவனங்களுக்கு வழங்க வேண்டியிருந்த 1.2 பில்லியன் டொலர் கடனில் 510 மில்லியன் டொலரை அரசாங்கம் செலுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர்

06

## ஹிஜ்ரி 1445; புனித நோன்பு இன்று ஆரம்பம்

ஸாதிக் ஷிஹான்



ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தென்பட்டதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டதால், ரமழான் முதல் நோன்பை இன்றிலிருந்து (12) ஆரம்பிப்பதென கொழும்பு பெரிய பள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ரமழான் தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து இடம் பெற்றது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் கலீபதுல் குலபா மௌலவி எம்.பி.எம் ஹிஷாம் பத்தாஹி தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. இதில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேய்க் எம். ஐ. ரிஸ்வி முப்தி மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் இணைந்தே உத்தியோகபூர்வமாக இந்த அறிவிப்பை விடுத்தனர்.

## யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக 4,500 உத்தியோகத்தர்கள் இணைக்கப்படுவர்

### நிதியமைச்சின் அனுமதியுடன் நடவடிக்கை



யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக வனஜீவராசிகள் அமைச்சில், 4500 விசேட உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கு நிதியமைச்சு அனுமதியளித்துள்ளதாக வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

நாட்டின் காடுகளை மொத்த நிலப்பரப்பில் 32% வரை அதிகரிக்கும் திட்டத்துடன் தொடர்புடைய வன எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணி இந்த ஆண்டு

06

## விமானப்படையில் சேர்வதற்கு யாழ். இளைஞர்கள் அதிக ஆர்வம்

### இதுவரைக்கும் 250 பேர் விண்ணப்பம்



விமானப்படையில் சேர்வதற்கு யாழ்ப்பாண இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்த தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இதுவரைக்கும் 250 க்கும் அதிகமான இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விமானப்படையின் 73வது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'எயர் டட்டு 2024' கல்வி மற்றும் தொழில்நுட்ப கண்காட்சியில் பங்

06

## தொழுகை நேரங்கள்

(திகதி: 10-13)



| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.49 |
| சுபஹ் | 5.04 |
| சூரிய உதயம் | 6.20 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 3.38 |
| மஃரிப் | 6.22 |
| இஷா | 7.32 |

## தங்கத்தின் விலையில் நேற்று திடீர் மாற்றம்



உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகின்ற நிலையில் நேற்றைய தினம் தங்கத்தின் விலை அதிகரித்திருந்தது.

இதற்கமைய நாட்டின் இன்றைய

06



03 விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க வாயு துப்பாக்கிகள்

## அஸ்வெசும: இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் ஜூனில்

### விண்ணப்ப முடிவு 15 இல்.

லோரன்ஸ் செல்வநாயகம்



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க

06

## யுக்திய நடவடிக்கைகளில் இராணுவ ஒத்துழைப்பை பெறவும் நடவடிக்கை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாதாள உலகக் குழு மற்றும் போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதற்காக

06

## ஹரக்கட்டாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஹரக்கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தகவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஹரக்கட்டா நேற்று (11) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

06

## அரிய வகை சத்திர சிகிச்சை செய்து டாக்டர் லக்மால் ஹேவகே சாதனை

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் முதல் தடவையாக அரிய வகை சத்திர சிகிச்சையை மேற்கொண்டு பதுளை பகுதியைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் சாதனை புரிந்துள்ளார்.

பதுளை போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக முதுகுத்தண்டு வலியால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கே, இந்த அரிய வகை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நோயாளி தற்போது

06

## பாதாளக்கோஷ்டி 43 பேருக்கு சிவப்பு அறிவிப்பு எச்சரிக்கை



பாதாளக் குழுக்களைச் சேர்ந்த 43 பேருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ

06

## மத மாற்றத்துக்கு எதிராக சட்டம் கொண்டுவர அமைச்சு ஆராய்வு



மத மாற்றங்களைத் தூண்டும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் விதுரவிக்ரமநாயக்கா தெரிவித்துள்ளா ர். இலங்கை சங்க நிகாய தலைவர்களுடன் அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்படாத மத

06

## வெளிநாடு அனுப்புவதாக மோசடி செய்த பெண் கைது

### வங்கிக் கணக்கில் ரூ. 4 கோடி பணப் பரிமாற்றம்



வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி 60 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஊரெழு பகுதியைச் சேர்ந்த 27 வயது யுவதியே, யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இப்பெண்ணின் வங்கிக் கணக்கில் கோடிக்கணக்கான ரூபாவில்

06

# நெருக்கடி வேளையில் நாட்டைப் பொறுப்பேற்காத எவர் மீதும் நான் குற்றம் சுமத்தப் போவதில்லை!

## ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டத்துக்கு தலைமை வகித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை

'நெருக்கடி வேளையில் நாட்டைப் பொறுப்பேற்காத எவரையும் நான் குற்றம் சாட்டப்போவதில்லை' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டி நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் நடைபெற்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றினார்.

முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் புரட்சியை ஆரம்பிக்கப் போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.









நெருக்கடி நேரத்தில் நாட்டை பொறுப்பேற்காத எவரையும் தாம் குற்றம் சாட்டப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டை அவர்களால் பொறுப்பேற்பதற்கு முடியாமையே அதற்கான காரணம் என்பது தற்போது உறுதியாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

"நாட்டின் பஞ்சாயத்துக்காரர்களின் பிடிக்குள் சிக்கியுள்ள ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஐ.தே.க வினருக்கு இடமில்லை" எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சக்திக்குச் சென்ற அனைத்து ஆதரவாளர்களையும் மீண்டும் தாய் வீட்டுக்கு வருமாறும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

"பூஜ்ஜியத்திற்கு வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகள் சார்ந்த மக்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளை நான் ஒருபோதும் குறுகிய அரசியலுக்குள் அகப்பட மாட்டேன்.

மஹிந்த ராஜபக்ஷ நல்லவர் அல்ல எனக் கூறும் ஐக்கிய மக்கள் சக்தியினர் இன்று மஹிந்தவின் ஆசிரியரை அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டுள்ளனர். மஹிந்த நல்லவர் இல்லை என்றால் மஹிந்தவின் ஆசிரியர் எவ்வாறு நல்லவராக முடியும்? என்று ஜனாதிபதி தனது உரையில் கேள்வி எழுப்பினார்.

'நிஜம்' என்ற தொனிப்பொருளில் குளியாப்பிட்டி நகரசபை விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் வெள்ளம் திரண்டு காணப்பட்டது.

குளியாப்பிட்டி உட்பட குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த நகரசபை விளையாட்டரங்கில் அணிதிரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, கொழும்பு மாவட்ட தலைவர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜேவர்தன அங்கு உரையாற்றுகையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கவில்லையென்றால், இன்று நாடு எந்த நிலையில் இருக்கும் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது" என்று குறிப்பிட்டார்.

"இங்கு திரண்டுள்ள மக்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம். கடந்த காலத்தில் மிகவும் கடினமான சூழலை நாடு எதிர்கொண்டது. நாம் அனைவரும் பொருளாதார சுமையை உணர்கிறோம். காயத்திற்கு மருந்து போடும் போதும் வலி தெரியும். நாட்டின் பொருளாதாரத்தின் காயத்தை ஆற்ற, தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மருந்து கொடுத்து வருகிறார். எதிர்காலத்தில் பொருளாதாரம் மீண்டு வரும்போது மக்களுக்கு மேலும் நிவாரணம் வழங்க முடியும். கிரேக்க பொருளாதார நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவர 13 ஆண்டுகள் பிடித்தது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பொருளாதாரத்தை 2 வருடங்களில் சரி செய்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. ஜனாதிபதி அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த நிலையில், தற்போது

## 'நாட்டை அவர்களால் பொறுப்பேற்க முடியாமையே அதற்கான காரணம்'

அந்தப் பேச்சுவார்த்தையை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன. அவர்களின் அரசியல் கபடத்தனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வரிசை யுகத்தை ஜனாதிபதி ஒழித்தார். அதனால்தான் கபட அரசியல் கட்சிகள் பல்வேறு அவதூறுகளை எழுப்பி வருகின்றன. நாட்டின் யதார்த்தத்தை மக்களுக்குக் காட்ட, நாடு முழுவதும் இதுபோன்ற கூட்டத் தொடர் நடத்தப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் கட்சியுடன் அணி திரண்டுள்ளனர். எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் வெற்றி பெறத் தயாராகி வருகிறோம்" என்றும் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரையாற்றுகையில், "நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அன்றைய ஆட்சியாளர்களின் கொள்கைகளால் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. அரசின் வருவாய் உரிய முறையில் வசூலிக்கப்படாமை, ஒரே இரவில் உரப் பயன்பாட்டை நிறுத்தியமை போன்ற விடயங்கள் அதற்குக் காரணமாக அமைந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற போது, மிகக் குறைந்த அளவிலான வெளிநாட்டு கையி ருப்பே இருந்தது. அதிலிருந்து சில எரிவாயு சி லிண்டர்களை மட்டுமே வாங்க முடியும். அந்தப் பணம் ஒரு கப்பல் எரிபொருளை வாங்க போதுமானதாக இருக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் வெளிநாட்டு உறவுகளின் பயனாக எரிவாயு மற்றும் எரிபொருளைக் கொள்வனவு செய்யமுடிந்தது. 2019 இல் இருந்த நிலைக்கு நாட்டின் பொருளாதாரம் திரும்பி வருகிறது. நீங்கள் இழந்ததை மீள வழங்க அஸ்வெசும மற்றும் உரித்து திட்டங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று வடக்கில் அபிவிருத்தியும் ஐக்கியமும் கட்டியெழுப்பப்படுகின்றன. வடக்கில் 106 பேர் விமானப்படையில் அதிகாரிகளாக இணைவதற்கு விண்ணப்பித்துள்ளனர். மேலும் 156 பேர் ஏனைய பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். பொருளாதார முகாமைத்துவம் மற்றும் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டை உயர் நிலைக்கு உயர்த்த முடியும்" என்று தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உரையாற்றுகையில், "இந்தச் சவாலை ஜனாதிபதி என்னிடம் கையளித்த போது நான் குளியாப்பிட்டியவில் உள்ள மிகப்பெரிய விளையாட்டு மைதானத்தை தெரிவு செய்தேன். பெருந்திரளான மக்கள் இன்று திரண்டுள்ளனர். ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தின் மீது இவர்கள் நம்பிக்கை வைத்து இங்கு வந்துள்ளனர்.

2019 இல் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடைய ஜனாதிபதி இடமளிக்க மாட்டார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையூறு செய்வதென்பது நாட்டிற்கு இடையூறு செய்வதாகும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை விட்டு வெளியேறிய ஒவ்வொரு முறையும் நாடு நெருக்கடிகளை எதிர்கொண்டது. மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் நாட்டை மீட்கும் பொறுப்பை யாரும் ஏற்க மாட்டார்கள். அடுத்த தேர்தல் எதுவாக இருந்தாலும் வெற்றி பெற அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" என்று தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உரையாற்றுகையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் வாழக் கூடிய சூழலை உருவாக்கப் பாடுபட்டுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதுபோன்ற கூட்டங்களை நடத்துவது சாத்தியமில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான பொருளாதார முகாமைத்துவத்தினால் மக்கள் இன்று பாதுகாப்பாக வாழ்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்து விலகிய ஒவ்வொரு முறையும் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அப்போது எந்தத் தலைவரும் நாட்டைப் பொறுப்பேற்கவில்லை. அந்தச் சவாலை ஏற்று நாட்டு மக்களுக்கு வாழும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டார். அத்துடன் அஸ்வெசும மற்றும் உரித்து திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன உரையாற்றுகையில் "ஐக்கிய தேசியக் கட்சி உலக சாதனை படைத்த கட்சி. 1994 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசியத் தலைவர் இந்த நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் உண்மையைக் கூறி பல தேர்தல்களில் தோற்றுள்ளார். 2022 ஆம் ஆண்டுக்குள் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டு வருடங்களே தேவைப்பட்டன. ஆனால் மீண்டும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றி அவதூறு பரப்பி தேர்தலில் தோற்கடித்தனர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேறொரு வேட்பாளரை முன்வைத்து வெற்றி பெற்று நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த பாடுபட்டார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக சமர்பிக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் 300 பில்லியன் டொலர்களை திரட்ட முடியாவிட்டால் 2022 ஆம் ஆண்டளவில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை. உலக வரலாற்றில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை வைத்துக்கொண்டு பிரதமர் பதவியையும் ஜனாதிபதிப் பதவியையும் பெற்ற ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அந்தத்



## ஐ.தே.கவின் முக்கிய தலைவர்கள் பங்கேற்பு

தலைவரை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும். உங்கள் உரிமைகளைக் காப்பாற்றிய தலைமையை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரியுங்கள்" என்று தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவர் ரவி கருணாநாயக்க உரையாற்றுகையில், "ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டின் பழைமையான கட்சி. இந்த நாட்டின் அபிவிருத்திக்கு எமது கட்சி பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டு ஜனாதிபதியாக தெரிவாக ரணில் விக்கிரமசிங்கவினால் அது முடிந்தது. 2022 இல், இந்த நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, எரிபொருள் மற்றும் எரிவாயுவிற்காக வரிசையில் நிற்க நேரிட்டது. மக்கள் தங்கள் நேரத்தை வீதிகளில் கழித்தனர். அந்த பொருளாதாரத்தை சீர்செய்வதற்கான சவாலை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டார். இன்று மக்களின் வாழ்வுரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எப்பொழுதும் நாட்டில் கனவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. 60 களில் நிலவில் இருந்து சோறு கொண்டு வருவதாகச் சொன்னபோது வாக்களித்தனர். 3.50 ரூபாய்க்கு பாண் தருகிறேன் என்று சொன்னதும் வாக்களித்தனர். இன்றைய நாட்டிற்கு போட்டி நிறைந்த பொருளாதார அமைப்பு தேவை. அந்தத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டை பின்னுக்கு தள்ளுவதா அல்லது முன்னோக்கிக் கொண்டு செல்வதா என்பதை சிந்திக்க வேண்டும். கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் 30 இலட்சம் உறுப்பினர்கள் அமைதி காத்தனர். அவர்கள் அனைவரையும் மீண்டும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்த வந்து, ஏனைய கட்சிகளுடன் இணைந்து எதிர்வரும் அனைத்து தேர்தல்களிலும் வெற்றிபெற வேண்டும்" என்று தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார உரையாற்றுகையில், " நாம் வெளியில் வர முடியாது என எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். ஆனால் இன்று குளியாப்பிட்டியவிற்கு வந்துள்ள மக்கள் வெள்ளத்தைப் பார்த்தால் அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றி பெறும் என்பது தெளிவாகிறது. 88_89 களில் நாட்டையே தீக்கிரையாக்கியவர்கள் நாடு முழுதும் சென்று பொய்யைப் பரப்பி வருகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சி செய்த போதும், 2015 இல் அன்றைய ஜனாதிபதி சிறிசேனவின் காலத்தில் தலைமைப் பதவி பெற்றாலும் அவர்கள் நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது. இந்த நாட்டில் மீண்டும் பரிசோதனை செய்து பார்க்க வாய்ப்பு வழங்க முடியாது. பொருளாதாரத்தை வென்றெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்த்துவதற்கு ஒத்துழைக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.







## குளியாப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம்!





## ரமழான் சிந்தனை

## ரமழானை வரவேற்போம்

ரமழான் இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாகும். இது ஷஃபான் மாதத்தை அடுத்து வரக்கூடியது. இம்மாதத்திற்கு ஏராளமான சிறப்பம்சங்கள் உள்ளன.

அல்லாஹுத்தஆலா இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல் குர்ஆனை இறக்கியருளிய இம்மாதத்தில் நோன்பு நோற்பதை கட்டாயக் கடமையாக்கியுள்ளான். இம்மாதத்திலுள்ள ஆயிரம் மாதங்களை விடவும் மிகச்சிறந்த இரவான லைலத்துல் கத்ரில் தான் இக்குர்ஆன் இறக்கியருளப்பட்டது.

இம்மாதத்தில் நோன்பு நோற்பதையும், இரவு வணக்கங்களில் ஈடுபடுவதையும் எமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான காரணமாக்கி வைத்துள்ளான் அல்லாஹ். சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படவும், நரகத்தின் வாயில்கள் மூடப்படவும், தீங்கு விளைவிக்கும் ஷைத்தான்கள் விலங்கிடப்படவும் கூடிய மாதமாக விளங்குகிறது ரமழான்.

இம்மாதத்தில் இரவு வணக்கத்தில் எந்த மனிதன் இமாமுடன் சேர்ந்து ஈடுபட்டு இமாம் அவர்கள் அவருடைய இடத்திலிருந்து செல்லும் வரை இரவு வணக்கத்தில் ஈடுபடுகின்றாரோ அவருக்கு லைலத்துல் கத்ருடைய பாக்கியம் எழுதப்படுகின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவுத்)

மேலும் ரமழானில் எவர் உம்ராவுடைய கடமையை நிறைவேற்றுவாரோ அவருக்கு ஹஜ் செய்வதற்கு சமனான நன்மை கிடைக்கும். இம்மாதத்தில் இஃதிகாபுடைய வணக்கம் சுன்னத்தாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இம்மாதத்தில் அதிகமதிகம் குர்ஆனை ஓதல் ஒருவர் மற்றவருக்கு அதனைக் கற்றுக்கொடுத்தல் என்பனவும் மிகச் சிறப்பான அமல்களாக விளங்குகின்றன.

இவ்வாறு இறையருள் நிறைந்த இப்புனித மாதத்தை இன்முகத்துடன் வரவேற்போம். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின வழிகாட்டல்களுக்கும் ஏற்ப இம்மாதத்தை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## லேக் ஹவுஸ் நிறுவனத்தின் டிஜிட்டல் அச்சிடும் பிரிவு





இலக்கம். 140.டி.பி .ஜாயா மாவத்தை , கொழும்பு 10 களனி வெளி கிளையில் நேற்று (11) ஆரம்பித்து வைக்கப்பட்டது. லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் மற்றும் டிஜிட்டல் அச்சகப்பிரிவு முகாமைத்துவ பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் தலைமையில் இப்பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

## விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க வாயு துப்பாக்கிகள்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

*விவசாய நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் குரங்குகளை விட்டுவதற்கு வாயு துப்பாக்கிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஸ்ரீலங்கா ஹதபிம அதிகார சபையின் தலைவர் சரத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.*

06


## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல:** ATU /LND /04/DO56
**காணி அமைச்சின் இலக்கம்:** 4-3/5/2020/HA/24

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது மேலதிக விபரங்களுக்கு 2024.02.10ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2370/31 ஆம் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகைகளின் படி

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | தென் மாகாணம் |
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : | அத்துரலிய |
| கிராம உத்தியோகத்தர் | : | 315 பஹல அத்துரலிய |
| கிராமத்தின் பெயர் பிரிவு | : | பஹல அத்துரலிய |
| காணியின் பெயர் | : | இடன்கொட பன்சல் வத்த |
| வரைபட இலக்கம் | : | கடஸ்டர் படம் 820485 |
| துண்டு இலக்கம் | : | 01 |

**காணி கொள்வனவு உத்தியோகத்தர்**
**பிரதேச செயலாளர்**
**அத்துரலிய**

**2024 மார்ச் மாதம் 04ஆம் திகதி**
**அத்துரலிய பிரதேச செயலகத்தில்.**

## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம்460) 7(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல:** ARA/LND/ACQV1/D3/64
**உல்லாச பிரயாண மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல:** 4-3/18/2019/WS/439

கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை மண்சரிவினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றிய இடத்தில் குடிநீர் வசதியை வழங்குவதற்கான நீர் சுத்திகரிப்பு அலகு மற்றும் நீர் தாங்கியொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் சுவீகரித்துள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இலக்கம் 2370/33 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | கேகாலை |
| பிரதேச செயலகம் பிரிவு | : | அரனாயக |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | 44ஏ, ஹபலக்காவ |
| கிராமத்தின் பெயர் | : | ஹபலக்காவ |
| காணியின் பெயர் | : | கொபேகடுவஹேன |
| கடஸ்த்தரல் வரைபட இலக்கம் | : | க.வ. 610388 |
| காணித்துண்டு இலக்கம் | : | 01. |

**ஷாமலி பியதிஸ்ஸ,**
**பிரதேச செயலாளர்,**
**அரனாயக.**

**2024 மார்ச் மாதம் 07ஆம் திகதி**
**பிரதேச செயலகம்,**
**அரனாயக.**

## 2015 இல. 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் சட்டத்தின் 131ஆம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம் முழு இலங்கை மக்களிடமும் மன்னிப்புக் கோரல்

சீதுவ நீர்கொழும்பு வீதியில் இல. 590 எனுமிடத்தில் அமைந்துள்ள என்.எஸ். மெடிகல் எனும் மருந்தகத்தில் கடமையாற்றிய வர்னகுல கொட்டகே காலிங்க சுபுன் கல்ஹார பெர்னான்டோ ஆகிய நான், மருந்தகத்தில் தகைமை இன்றி மருந்துகளை விநியோகித்தல், மருந்துகளை சிட்டை இன்றி விநியோகித்தல், கூடிய விலையில் மருந்துகளை விநியோகித்தல், பற்றுச்சீட்டு விநியோகிக்காமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு நீர்கொழும்பு கௌரவ நீதவான் நீதிமன்றத்தில் 2023.11.30ம் திகதி தொடரப்பட்ட இல.M.68777 வழக்கில் நான் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் அதற்காக எனக்கு கௌரவ நீதிமன்றம் ரூபா ஒரு இலட்சம் தண்டம் விதிக்கப்பட்டதாகவும் அதனை என்னால் செலுத்தப்பட்டது எனவும் இலங்கை மக்களிடம் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

என்.எஸ். மெடிகல் நிறுவனத்தில் கடமையாற்றிய மருந்தாளர் ஆகிய குடா பதுகே புஷ்பா தமயந்தி ஜயசூரிய ஆகிய நான் இல. M-68777 வழக்கில் மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் ரூபா இரண்டு இலட்சம் தண்டத் தொகை விதிக்கப்பட்டதாகவும், அது என்னால் செலுத்தப்பட்டது எனவும் இலங்கை மக்களிடம் இத்தால் அறியத் தருகின்றேன்.

இவ்வாறான குற்றத்தை இனிமேல் மேற்கொள்ளமாட்டோம் எனவும் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக சகல இலங்கை மக்களிடமும் மன்னிப்பைக் கோருவதாகவும் நாம் இருவரும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

**வர்னகுல கொட்டகே காவிங்க சுபுன் கல்ஹார பெர்னான்டோ குடா பதுகே புஷ்பா தமயந்தி ஜயசூரிய**


## பொலிஸ் மா அதிபர் நேற்று பாதுகாப்பு செயலாளருடன் சந்திப்பு



**(ஸாதிக் ஷிஹான்)**

புதிய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று (11) பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இச்சந்திப்பு, கோட்டே ஸ்ரீ ஜயவர்தன புரயில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த புதிய பொலிஸ் மா அதிபரை ஜெனரல் கமல் குணரத்ன வரவேற்றதுடன், சட்டம் மற்றும் ஒழுங்குடன் தேசிய பாதுகாப்பு விடயங்களில் முக்கியமாக கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

மரியாதை நிமித்தம் இடம்பெற்ற இந்த சந்திப்பின், போது, பொலிஸ் மா அதிபருக்கு பாதுகாப்புச் செயலாளர் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இச்சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. நாட்டின் 36 வது பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதரவும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார்.


## A Great Opportunity to Own a Land Lot from Historical Kingdom of Kotte (Capital City)

### Invitation to Tender for Sale of 16 Valuable Home Plots 16 09th Lane, Ethul Kotte

A limited opportunity only for 16 valued

Crown Title






- 3 Phase Electricity
- Pipe Borne Water

Tender documents could be collected from Deputy General Manager (Supplies) of this Corporation on a payment of non- refundable fee of Rs.6,000/= in cash between 9.00 a.m. and 3.30 p.m. on any working day from 20/02/2024 – 25/03/2024.

Separate Tender Documents should be obtained for each Lot. Sealed tenders indicating **Procurement No. S/125/24 "Sale of Lands at 09th Lane, Ethul Kotte"** on top left hand corner of the envelope should be sent to reach the address Chairman, Procurement Committee, Sri Lanka Land Development Corporation, No. 03, Sri Jayewardenepura Mawatha, Welikada, Rajagiriya under registered post or be deposited in the Tender Box made available at the Supplies Division of this Corporation before 1.30 p.m. on 27/03/2024.

**Further details could be obtained from the Deputy General Manager (Lands & Marketing)**
**Contact Nos.: 011-2862152, 011-2867369 Ext. 308, 071-7402772**
**www.landdevelopment.lk**

**Chairman**
**Sri Lanka Land Development Corporation**
**No. 03, Sri Jayawardenapura Mawatha**
**Welikada, Rajagiriya.**

**Ministry of Urban Development & Housing**

## கம்பனிகள் பதிவு செய்யும் அனுமதிப்பத்திரம்

2007 இல.07 கம்பனிகள் சட்டத்தன் கீழ் 34ம் பிரிவின் பிரகாரம் “SANDHARA SPIRITUAL RESEARCH & ANTHROPOLOGY CENTER" என்ற பெயர் மற்றும் வடிவத்தின் கீழ் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கம்பனியொன்றை பதிவு செய்வதற்காக அனுமதிப் பத்திரமொன்றை வழங்குமாறு கம்பனிகள் பதிவாளரிடம் வேண்டுதல் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது. பெயருக்கு “வரையறுக்கப்பட்ட” என்ற வசனத்தை சேர்த்துக் கொள்ளாது என்பதை பின்பற்றி பொறுப்புடன் பதிவு செய்தல் வேண்டும்.

**சங்கத்தை அமைத்துள்ள நோக்கமானது :**

(5) (a) ஆய்வு விடயங்களைத் திட்டமிடல், செயற்படுத்தல், நடத்துதல், கலை மற்றும் காட்சிகள் பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டமாகும்.

(b) கலாசாரம் சமூக விஞ்ஞான ரீதியாக மற்றும் மானிட விஞ்ஞான ரீதியான ஆய்வுகள், செயலமர்வுகள் மற்றும் உரையாடல் கூட்டமைப்புக்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்.

(c) மதங்களுக்கிடையிலான பல்வேறு மதக் கற்பித்தல்கள் மற்றும் கற்பித்தல் அமர்வுகளின் ஆய்வு மற்றும் கல்வி செயற்றிட்டங்களை செயற்படுத்தல்

(d) அழகியற்கலை மற்றும் சங்கீத கல்வி, விசேட அழகியற்கலை செயலமர்வு திட்டங்கள், செயற்பாடுகளுக்கிடையிலான ஆய்வுகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்.

(e) கலாசாரங்களுக்கிடையிலான கல்வி, கலாசாரங்களுக்கிடையிலான கலந்துரையாடல் மற்றும் மரபுரிமை பெறுமதியுடைய கலாசார நிகழ்ச்சித் திட்டங்களின் ஆய்வுகளை செயற்படுத்துதல்.

(f) சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான கலாசாரங்களுக்குகிடையிலான மற்றும் மதங்களுக்கிடையிலான செயற்பாடுகள், புலமைக் கட்டமைப்புடனான கலந்துரையாடல்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்

(g) சமூக அறிவூட்டல் மற்றும் சமாதானத்தை அபிவிருத்தி செய்வதற்கான புதிய முறைமைகள் மற்றும் கருத்துப் போகங்கள் பற்றிய பல்வேறு செயற்றிட்டங்களின் ஆய்வுகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல்.

(h) கலாசாரங்களுக்கிடையிலான இலக்கியம் பற்றிய புலமை செயற்றிட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் அமர்வு ஆய்வுகளை செயற்படுத்துதல்.

(i) பல்வேறு மதங்கள், இனங்கள், கலாசாரம் மற்றும் தத்துவங்களுக்கு இடையில் சமாதானம், சகவாழ்வு மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்தலுக்காக கலை மற்றும் கலாசார அழகியற்கலையை பயன்படுத்தல் பற்றிய சமூக செயற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் நடத்துதல்.

(j) பல்வேறு கலாசார மத மற்றும் தத்துவ பெறுமதியுடனான அழகியற்கலை மற்றும் கலைத்துவ ஆக்கங்களை பாதுகாத்தல்.

(k) பல்வேறு அழகியற்கலை மற்றும் கலைத்துவ செயற்பாடுகளுக்கான சமமான பெறுமதி மற்றும் தொடராக ஒத்துழைப்புடன் செயற்படுத்துவதற்கும் சாதாரண சமூகங்களுக்கிடையிலான வேற்றுமைகாணாது செயற்படுத்துவதற்கும், பல்வேறு விடயங்கள் மற்றும் வழிகள் ஊடாக சமூகக் கல்வியை முன்னேற்றுவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் சகல இனங்கள், மதங்கள் மற்றும் கலாசாரத்திற்கு வாய்ப்பளிக்கும் நிறுவனமாகும்.

(l) சுற்றாடல், வனம் மற்றும் இயற்கையை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், சமூகத்தை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் நடத்துதல், மனித உரிமை மற்றும் விலங்குகளின் உரிமைகளை வலுவூட்டல் மற்றும் பாதுகாப்பதற்கான சமூக அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் ஆய்வுகளை செயற்படுத்தல்.

(m) சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக வலுவூட்டல்களை செயற்படுத்துதல் மற்றும் சமூக கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் செயற்படுத்துதல்.

(n) நிலையான சுற்றாடலுடன் சமூக வலுவூட்டலுக்கான விலங்குகளின் நலன்புரி, வனசீவராசிகள் பாதுகாப்பு, விலங்குகளின் ஜீவனோபாய பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விவசாய பசுமையூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் நடத்துதல்.

(o) மனித மற்றும் விலங்குகளின் உரிமைகள், வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய கலாசார மற்றும் அழகியற்கலை நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல்.

(p) ஆரம்ப மற்றும் இரண்டாம் கல்வி வழங்கப்படமாட்டாது.

சங்கத்தின் கட்டுரைகளை waters secretarial Services (Pvt) Ltd. இல. 1033/3, தலங்கம வடக்கு மாலபே என்ற முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பப் படிவத்திற்காக எதிர்ப்பதற்கு விரும்புகின்ற எந்த நபருக்கும், கம்பனிக்கு அல்லது கூட்டுத்தாபனத்திற்கு அவ் எதிர்ப்புக்களை 2024 ஏப்ரல் 02ம் திகதி அல்லது அதற்கு முன்பு கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், “சமாகம் மெதுர” இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்த, கொழும்பு 10 என்ற முகவரிக்கு கடிதம் மூலம் சமர்ப்பிக்க முடியும் என, இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

திகதி : 2024 மார்ச் 12

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் மாசி மாதம் 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 30



**குறள் தரும் சிந்தனை**

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

மனம் தூய்மையாக இருப்பதே அறம்;
மற்றவை ஆரவாரத்தைத் தவிர
வேறொன்றுமில்லை.

# தாயகம் மீதான பற்றுதல் ஊடகங்களுக்கு அவசியம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது படிப்படியாகச் சீரடைந்து வருகின்றது. கொவிட் தொற்று மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக அதலபாதாளத்துக்குள் வீழ்ந்திருந்த பொருளாதாரம் தற்போதுதான் படிப்படியாகச் சீரடைந்து வருவதாக பொருளாதாரம் தொடர்பான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நாடு முழுமையாக பொருளாதார வீழ்ச்சியிலிருந்து சீரடைவதற்கு சிறிது காலம் செல்லுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது.

நாட்டின் தலைமைத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றதன் பயனாக இலங்கையின் பொருளாதாரம் எதிர்காலத்தில் சீரடைந்து விடுமென்றே நம்பப்படுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நீண்ட கால அரசியல் அனுபவம், ஆளுமை, ஆற்றல், சர்வதேசத்துடனான நெருக்கம் போன்றவை காரணமாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு விரைவாக மீட்சி பெற்று வருகின்றது.

நாட்டு மக்களுக்கு இன்றைய நிலையில் அவசியமானது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதேயாகும். நாட்டின் பொருளாதார நெருக்கடி விரைவில் தீர வேண்டுமென்றே மக்கள் விரும்புகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற சிறப்பான திட்டங்களே இதற்குக் காரணமென்று மக்கள் நம்புகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக எதிரணியினர் ஆதாரமற்ற கருத்துகளைக் கூறி வருகின்றனர். நாட்டு மக்களைத் திசைதிருப்பும் நோக்கில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை எதிரணியினர் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பெரிதுபடுத்தி, எமது இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வதை அவர்கள் ஊக்குவித்து வருகின்றனர். இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதை ஊக்குவித்து, அரசுக்குச் சங்கடத்தை உருவாக்குவதே அவர்களது நோக்கம் ஆகும்.

அதேசமயம், நாட்டின் இளவயதினர் பலர் சமீபகாலமாக வெளிநாடுகளுக்குச் செல்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருவதாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. நாட்டின் அனைத்து இளைஞர், யுவதிகளுமே வெளிநாட்டுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்வதில் ஆர்வம் காட்டி வருவதாக அந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் சில ஊடகங்கள் அதீதமான முக்கியத்துவம் கொடுத்து பிரசாரம் செய்து வருவதையே அவதானிக்க முடிகின்றது. எமது நாட்டு இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஆர்வம் காண்பிப்பதென்பது புதிதான விடயமல்ல. வெளிநாடுகளுக்குத் தொழில்வாய்ப்புத் தேடிச் செல்வதும், அங்கு புலம்பெயர்ந்து சென்று வாழ விரும்புவதும் அக்காலத்தில் இருந்தே நாம் அறிந்து வருகின்ற விடயங்களாகும்.

அதிக சம்பளம் மற்றும் வசதியான வாழ்க்கை போன்ற எதிர்பார்ப்புகளுக்காக வெளிநாடுகளை நோக்கி எமது மக்கள் புலம்பெயர்வதென்பது அக்காலத்தில் இருந்தே இடம்பெற்று வருகின்றது. 1983 வன்செயலைத் தொடர்ந்து ஆரம்பமான புலம்பெயர்வு தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டே வருகின்றது. புலம்பெயர்வும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் எமது நாட்டு மக்களுக்கு புதிதான விடயங்களல்ல.

இவ்வாறிருக்கையில், தற்போது இளவயதினர் பலர் வெளிநாடு செல்வதில் ஆர்வம் காண்பித்து வருவது குறித்து ஒருசில ஊடகங்கள் கூடுதலான முக்கியத்துவமளித்து செய்திகளை வெளியிட்டு வருவது திட்டமிட்ட செயலென்றே எண்ணத் தோன்றுகின்றது.

எமது நாட்டின் சில ஊடகங்கள் அரசுக்கு விரோதமான செய்திகளையே வெளியிட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. அரசாங்கத்தை வசைபாடுவதும், எதிரணியினரின் புகழ் பாடுவதும் அந்த ஊடகங்களின் செயற்பாடுகளாகிப் போயுள்ளன. எமது நாட்டு இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்வதில் ஆர்வம் காட்டுவதாக வெளியிடப்படுகின்ற செய்திகளும் அவ்வாறானவைதான்.

எமது அரசியல்வாதிகள் பலர் சுயநல சுபாவம் மிக்கவர்கள். நாட்டின் எதிர்கால நலன் குறித்த அக்கறை அரசியல்வாதிகள் பலரிடம் கிடையாது.

தத்தமது அரசியல் நலனும் எதிர்கால கனவுகளுமே அவர்களுக்கு முக்கியமானவையாகும். அவர்களது அவ்வாறான சுயநலன் காரணமாகவே நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதுடன், நாட்டின் இனஐக்கியமும் சீர்குலைந்து போயுள்ளது. ஆகவேதான் எமது நாட்டு இளைஞர், யுவதிகள் பலரிடம் நாட்டின் அரசியல் மீது வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டுள்ளனவென்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும் எமது மக்கள் அனைவரும் தாய்நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்களாகவே உள்ளனர். வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்கள் அனைவருமே தங்களது தாயகம் மீது பற்றுக் கொண்டவர்களாவர். தாயகப்பற்று ஊடகங்களுக்கும் உண்டென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# சவுதி மன்னரின் விருந்தாளி திட்டத்தில் இலங்கையர் 10 பேருக்கு உம்ரா வாய்ப்பு



சவுதி அரேபியாவின் மன்னரும் இரண்டு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் ஆல் சஊதின் விருந்தாளிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உம்ரா கிரியை மேற்கொள்வதற்கு இலங்கையைச் சேர்ந்த பத்து பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம். எம். நயீமுதீன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் உள்ளிட்ட 10 பேர் இவ்வாறு வாய்ப்பு கிடைக்கப்பெற்று சவுதி அரேபியாவுக்கு பயணமாகியுள்ளனர். சவுதி அரேபியாவின் மதீனாவை சென்றடைந்த இவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் இருந்து ஆயிரம் பேர் சவுதி அரேபியாவின் மன்னரும் இரண்டு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் ஆல் சஊதின் விருந்தாளிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் உம்ராவை மேற்கொள்ள அழைப்படவிருப்பதாக சவுதியின் இஸ்லாமிய விவகாரம், பிரசார மற்றும் வழிகாட்டல் அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தது. அந்த வகையில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, தெற்காசியா நாடுகளைச் சேர்ந்த 250 பேர் இம்முறை சவுதி



மன்னரின் விருந்தாளிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உம்ராவை மேற்கொள்ள வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அவர்களில் 10 பேர் இலங்கையராவர்.

இத்திட்டத்தின் கீழ் உம்ராவை மேற்கொள்ள வருகை தந்துள்ளவர்களுக்கென மதீனா, மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலின் இமாம் அஹ்மத் அலி அல் ஹுதைபி தலைமையில் மதீனா கிரவ்ன் பிளாஸா ஹோட்டலில் கூட்டமொன்று நடத்தப்பட்டது.

அக்கூட்டத்தில் உரையாற்றிய மஸ்ஜிதுன் நபவி இமாம், இத்திட்டத்தின் கீழ் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் உம்ரா மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அவர்களை நாம் வாழ்த்தி வரவேற்கிறோம். ஒரு மனிதனுக்கு அல்லாஹ் நல்லதை நாடுவது என்பது நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். அந்த வகையில் இது பாரியதொரு அருளாகும்.

உலகின் பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் இங்கு வருகை தந்துள்ளனர். இவர்களில் மொழி, பிரதேச வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் எல்லோரும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் சகோதரத்துவ வாஞ்சையுடன் செயற்படுகின்றனர்" என்றார்.

இச்சமயம் இலங்கை பிரதிநிதிகள் இவ்வாய்ப்பை பெற்றுத்தந்த அல்லாஹ்வுக்கு முதலிலும் அதனைத் தொடர்ந்து சவுதி மன்னருக்கும் சவுதியின் இலங்கைத்தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானிக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

மதீனாவிலிருந்து
மர்லின் மரிக்கார்

# அக்கரைப்பற்று இராமகிருஷ்ண கல்லூரி மாணவருக்கு இணைந்த கரங்கள் அமைப்பு வழங்கிய உதவி

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசியக் கல்லூரியில் கல்வி கற்கும் தந்தையை இழந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 50 மாண







வர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது பாடசாலை அதிபர் க.ஜயந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது என்றும் 'எழ்மையை ஒழிப்போம், கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளிலும் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான சி.மதியழகன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ். அகிலன், பழைய மாணவர் சங்க உறுப்பினர் வி.சுகிர்தகுமார், லக்மிகாந்த், பாடசாலையின் ஆசிரியர்களான செவ்வேல் குமரன், சுதர்சன், கின்ஸ்லி, சத்தியராஜ், அற்புதநாதன், திருமதி எல். திருச்செல்வம், திருமதி எம்.ஜீவிதா மற்றும் பாடசாலை உத்தியோகத்தர்களான பற்றிமா, ரோசானா, திருமதி கே. கிரியாழினி, இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ.கஜரூபன், சி.காந்தன்,ஆகியோர் கலந்து கொண்டு 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை வழங்கி வைத்தனர்.

எம். ஐ. எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# கல்முனை நிதா உல் பிர் சமூகசேவை அமைப்பினால் புனித ரமழானை முன்னிட்டு உணவுப் பொருட்கள்

புனித ரமழானை முன்னிட்டு கல்முனை நிதா உல் பிர் சமூக சேவை அமைப்பினால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இது குறித்த நிகழ்வு நேற்றுமுந்தினம ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் நடைபெற்றது.







நிதா உல் பிர் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான இஸட்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1000 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இப்பொதியில் அரசி, சீனி, பருப்பு, ஈச்சம்பழம், தேயிலை, வெங்காயம், கிழங்கு, கரட் மற்றும் மரக்கறி வகைகளும் அடங்கியிருந்தன. இந்நிகழ்வில் விஷேட பேச்சாளராக மருதமுனை தாருல் ஹுதா பெண்கள் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷேய்க் எம்.ஐ.எம். ஜிபான் மதனி கலந்து கொண்டார்.

இதில் நிதாஉல் பிர் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகர்களான ஏ.பி.எம். அஸ்ஹர், மௌலவி அலி ஜின்னா மற்றும் கல்முனை பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் எம். ஜௌபர், சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், சமூக சேவையாளரும் வர்த்தகருமான எம்.ஜிப்ரி, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஜௌபர் மற்றும் நலன்விரும்பிகள், நிதா உல் பிர் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான இஸட்.எம்.அமீன் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்கள் சிலவற்றில் கடமையாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களுக்கான விஷேட பொதிகளும் இங்கு வழங்கி வைக்கப்பட்டன.

அஸ்ஹர் ஆதம்
(கல்முனை குறூப் நிருபர்)

# தேசத்தின் பெருமை அடையாளமாக திகழும் சவூதி அரேபிய தேசியக் கொடி

சவூதி அரேபியாவின் கொடி தேசத்தின் பெருமையாகவும் ஒற்றுமை மற்றும் தேசிய அடையாளத்தின் சின்னமாகவும் விளங்குகிறது.

**1. இறைவன் ஒருவன் என்ற நம்பிக்கை:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் "இறைவன் ஒருவன்" என்ற நம்பிக்கையை பிரகடனப்படுத்துகிறது. இது இஸ்லாமிய மதத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

**2. இணைவைத்து வணங்குவதற்கான எதிர்ப்பு:**

இந்த வாசகம் 'இறைவன் ஒருவன்' என்ற நம்பிக்கையை வலியுறுத்துவதோடு, இணைவைத்து வணங்குவதை (ஷிர்க்) தடை செய்கிறது.

**3.சமத்துவத்தின் கொள்கை:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் இனம், மொழி, நிறம் அல்லது சமூக அந்தஸ்து ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களையும் சமமாகக் கருதுகிறது.

**4.தூய்மை மற்றும் நேர்மை:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் தூய்மை, நேர்மை மற்றும் அமைதியை குறிக்கிறது. இது சவூதி அரேபியா கொண்டிருக்கும் மதிப்புகளையும் கொள்கைகளையும் பிரதிபலிக்கிறது.

**5. வலிமை மற்றும் தைரியம்:**

கொடியில் உள்ள வாள் வலிமை, தைரியம் மற்றும் பாதுகாப்பை குறிக்கிறது. இது லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகத்தின் கொள்கைகளை பாதுகாக்க சவூதி அரேபியாவின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

**6. தேசிய ஒற்றுமை:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் தேசத்தின் மீது மக்களுக்கு இருக்கும் பெருமித உணர்வை வளர்க்கிறது.

**7.கலாசார அடையாளம்:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் சவூதி அரேபியாவின் கலாசார அடையாளத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

**8. மதிப்பு மற்றும் மரியாதை:**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் கொண்டிருப்பதால், கொடி மிகுந்த மதிப்புடன் கையாளப்படுகிறது.

சவூதி அரேபியாவின் கொடியில் உள்ள லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் தேசத்தின் மத நம்பிக்கை, மதிப்புகள், கொள்கைகள், ஒற்றுமை மற்றும் கலாசார அடையாளத்தை பிரதிபலிக்கிறது.

★ கொடியில் உள்ள லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வாசகம் அரபு எழுத்தணியில் கத்துஸ் ஸுலுஸ் என்ற எழுத்து வகையில் எழுதப்பட்டுள்ளது.

★ கொடியின் பச்சை நிறம் இஸ்லாமிய மதத்தை குறிக்கிறது.

★ கொடியின் வெள்ளை நிறம் தூய்மை மற்றும் நேர்மையை குறிக்கிறது.



★ கொடியின் வாள் வலிமை, தைரியம் மற்றும் பாதுகாப்பைக் குறிக்கிறது.

சவுதி அரேபிய கொடியின் சிறப்பில்புகள்:

**1 ஒற்றுமையின் அடையாளம்:**

★ சவுதி அரேபியாவின் அனைத்து குடிமக்களையும் ஒன்றிணைக்கும் ஒரு அடையாளம்.

★ நம்பிக்கை மற்றும் தேசத்தின் அடிப்படை தூண்களை பிரதிபலிக்கிறது.

★ சுற்றுச்சூழல் மற்றும் நிலப்பரப்பையும் குறிக்கிறது.

★ அரேபிய தீபகற்பத்தில் சவுதி அரேபியா பிரதிநிதித்துவப்படுத்தும் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.

**2. கௌரவத்தின் அடையாளம்:**

★ சவுதி அரேபியாவின் தேசிய கம்பீரம் மற்றும் வலிமையின் வெளிப்பாடு.

★ அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் இறையாண்மையின் சின்னம்.

★ தேச ஒற்றுமை மற்றும் தேசதத்தின் அடையாளம்.

★ எளிமையான மற்றும் நினைவில் கொள்ள எளிதான வடிவமைப்பு.

★ தெளிவான வண்ணங்கள் மற்றும் சின்னங்கள்.

★ சவுதி அரேபியாவின் அடிப்படை மதிப்புகள் மற்றும் கொள்கைகளை பிரதிபலிக்கும் சின்னம்.

★ மரியாதை மற்றும் கௌரவத்தின் உணர்வைத் தூண்டும் தனித்துவமான தோற்றம்.

**3. கண்டிப்பாக கவனிக்க வேண்டியவை:**

★ இறந்த மன்னர்கள் மற்றும் தலைவர்களின் உடல்களை மூட பயன்படுத்தப்படக் கூடாது.



★ துக்க நிகழ்வுகளில் கீழே இறக்கப்படக் கூடாது.

★ உயர்ந்த விருந்தினர்களுக்கு மரியாதை செலுத்தும் போது வளைக்கப்படக் கூடாது.

★ வணிக முத்திரை அல்லது விளம்பர நோக்கங்களுக்காக பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**தேசிய கொடி தினம்:**

★ சவுதி அரேபியாவின் தேசிய கொடியின் முக்கியத்துவத்தை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 11ம் திகதி தேசிய கொடி தினம் கொண்டாடப்படுகிறது.

★ 1937ம் ஆண்டு மார்ச் 11 ஆம் தேதி, மன்னர் அப்துல் அஜீஸ் அவர்களால் கொடி அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

கலாநிதி அப்துல் ஸத்தார்
விரிவுரையாளர், காஸிமிய்யா அரபுக்கல்லூரி, புத்தளம்

## மார்ச் மாத சிறப்புப் புனிதர்

# நீதிமான் புனித சூசையப்பர்



வல்லமை படைத்த இறைவன், பாவ இருளில் மூழ்கிக் கிடக்கும் மனித குலத்திற்கு மீட்பளிக்க விரும்பியதால் இயேசு கிறிஸ்துவை பூவுலகிற்கு அனுப்பி பாடுபட்டு மரித்து அதன்மூலம் நமக்கு முடிவில்லா வாழ்வை தரவிரும்பி பெண்களின் தூயவளான மரியன்னையை அவருக்கு தாயாராகத் தெரிந்து கொண்டார்.

இறைவன் தன்னருளால் வானதூதர்களையும் புனிதர்களையும் மரியன்னை காண்பதற்கு ஆசிவழங்கினார். அன்னையை ஜென்மப் பாவமில்லாமல் பூமியில் பிறக்கச் செய்து, தூய ஆவியால் நிரப்பி வானுலகிலும் பூவுலகிலும் உயர்வடையச் செய்தார்.

தூய ஆவியால் மரியன்னை கருவுற்று இயேசுகிறிஸ்துவைப் பெற்றெடுப்பதற்கு ஒர் துணையும் இயேசுகிறிஸ்துவுக்கு பூவுலகில் ஒரு தந்தையும் வானுலகில் நீதிமானும் தேவைப்பட்டதால் சூசையப்பரை இறைவன் தேர்ந்தெடுத்து மரியன்னைக்கு கணவராகவும் குழந்தை இயேசுவுக்கு தந்தையுமாக்கினார். தக்க வயதை அடையும்வரை பேணிக்காக்கும் நல்லதொரு தந்தையாக இவரை இறைவன் நியமித்தார்.

இறைவன், தன் மகனை முன்மாதிரிகையாக வளர்க்கும் பொறுப்பையும் அருளையும் ஆசியையும் புனித சூசையப்பருக்கு வழங்கினார்.

தூய மரியன்னைக்கு அளித்த உயர்வை விடவும் புனித சூசையப்பருக்கு அளித்த நீதிமான் என்ற உயர்வு வானுலகிலும் பூவுலகிலும் யாருக்கும் வழங்கப்படவில்லை. அதனால் புனித சூசையப்பர் வானதூதர்களைவிடவும் தூயவர்களைவிடவும் மேலானவரென வேத வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர்.

இறைவன் யாரை உயர்ந்த நிலைக்கு உயர்த்துகிறாரோ அவர்களுக்கு அளப்பரிய ஆசியையும் அருளையும் நல்குவதோடு நற்குணததையும் கொடையாக அளிக்கிறார்.

அரசனாக முடிசூட்டிகொள்கிறவர்கள் நல்லாட்சி செய்யவும் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் இறைப்பணியை செவ்வனே செயலாற்றவும் வேறு பணிகளில் ஈடுபடுவோர் தத்தம் பணிகளை திறம்பட ஆற்றவும் இறைவன் விரும்புகிறார்.

எல்லா பணிகளுக்கும் மேலான பணிக்கு தெரிவு செய்யப்பட்ட புனித சூசையப்பருக்கு இறைவன் அவருடைய பெயர் என்றும் நிலைக்க மேலான அருளையும் ஆற்றலையும் அவருக்களித்தார்.



புனித சூசையப்பர் இறைவனின் திருவுளத்திற்கு பணிந்து தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை மிக நன்றாக செய்துமுடித்தார். அவர் பொறுமை, நம்பிக்கை, விசுவாசம், இறைஅன்பு, பணிவு ஆகிய நற்குணங்களைக்கொண்டு வாழ்ந்தார். அதனால் அவரை இறைவன் தூயவர்களை விடவும் மேலாக உயர்த்தினார்.

இதன்மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, நம்மை இறைவன் என்றென்றும் அன்புசெய்து வான் வீட்டைத் தருவதற்காக படைத்தார் என்பதுதான். அவர் கிறிஸ்தவர்களல்லாதோரையும் தம் அருளால் கிறிஸ்தவர்களாக்கினார். இறைவன் சகல வரங்களையும் அளித்து திருச்சபையை நிலைநிறுத்தி அருட்சாதனங்கள் வழியாக தம் அருங்கொடைகளை அளித்து வருகிறார்.

கிறிஸ்டோபர்...




# "இயேசுவிற்கு முன் இரகசியங்கள் எதுவும் இல்லை"

## திருத்தந்தை பிரான்சிஸ்

இயேசு உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்லமாறாக அதை மீட்கவே கடவுளால் உலகிற்கு அனுப்பப்பட்டவர் என்றும், இயேசுவிற்கு முன் இரகசியங்கள் என்பது இல்லை ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவரின் இதயத்தில் இருப்பவற்றையும் அறிபவர் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செபஉரையின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தவக்காலத்தின் நான்காம் வார நற்செய்தி வாசகமான இயேசுவும் நிக்கதேமும் என்ற பகுதி குறித்தக் கருத்துக்களை எடுத்துரைத்த திருத்தந்தை நிக்கதேமு இயேசு செய்த அரும்அடையாளங்களைக் கண்டு இயேசுவை இரவில் சந்திக்க வந்தவர் என்றும், இயேசு, கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதைக் கண்டறிந்தவர் நிக்கதேமு என்றும் கூறினார்.

நற்செய்தியில் இயேசு பல இடங்களில், தான் சந்திக்கும் மக்களின் நோக்கங்கள் என்ன என்பதை வெளிப்படுத்துபவர், பரிசேயர் போன்றோரின் தவறானப் போக்கினை வெளிப்படுத்துபவர், சமாரியப்பெண் போன்றோரின் வாழ்க்கையை சிந்தித்துப் பார்க்க வைப்பவர் போன்று அடையாளப்படுத்துகின்றார் என்று



கூறிய திருத்தந்தை அவர்கள், இயேசுவிற்கு முன் இரகசியங்கள் என்று எதுவுமில்லை ஏனெனில் இயேசு நம் ஒவ்வொருவரின் இதயத்தையும் அறிபவர் என்றும் கூறினார்.

# கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழா









கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இலங்கையிலிருந்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விசுவாசிகள் இந்த இம்முறை திருவிழாவில் கலந்து கொண்டதுடன் திருவிழா நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

# அன்பில்லாதவர் கடவுளை அறிந்து கொள்வதில்லை

அன்பு செய்ய கடவுள் நம்மை அன்பு செய்கிறார். இதுதான் மகிழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம். இத்தகைய கருத்துகளை வேதாகமவாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

கடவுள் நம்மை எந்தப் பாரபட்சமுமின்றி முழுமையாக அன்பு செய்கிறார். இறைவாக்கினர் எரேமியா கூறுவது போல் "நமக்கு முடிவில்லா அன்பைக் காட்டியுள்ளார் தமது பேரன்பால் நம்மை இழுத்துக் கொள்கிறார்" (எரே 31:3).

தாயைப் போல், ஏன் அவரைவிட ஒரு படி மேலாக இறைவன் நம்மை அன்பு செய்கிறார் (எசா 49:15), இப்படிக் கடவுள் நம்மீது கொண்டுள்ள அந்த அன்பை அறிகின்றோம். அன்புக்குரிய இறைமக்களாக நாம் இருக்கின்றோம். "அவர் நம்மை அன்பு செய்வதால் நாம் வெற்றியாளர்களாக இருக்கிறோம்" (உரோ 8:37).

எல்லாவற்றுக்கும் மேலாக தந்தையாம் இறைவன் தம் ஒரே மகன் வழியாக நம்மை அன்பு செய்தார் தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் (யோவா 3:16).

"நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே



மகனை உலகிற்கு அனுப்பினார் இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவா 4:9) இதுதான் கடவுளது அன்பின் உச்சம்.தந்தையின் அன்பு இப்படிப் பட்டதாக இருக்கின்றது என்றால் மூவொரு கடவுளின் இரண்டாம் ஆளாகிய இறைமகன் இயேசுவின் அன்பு இணையற்றதாக இருக்கின்றது.

அவர் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றத் தம்மையே இம்மனுக்குலத்திற்குக் கையளிக்கிறார். அனைவரையும் அன்பு செய்தார் எவரையும் வெறுக்கவில்லை.

"நல்ல ஆயன் நானே; நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் ' கொடுப்பார்" (யோவா 10:11) என்று சொல்லி மந்தையைக் காத்திடத் தம்மையே கையளித்தார்.

"நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்று கூறுகிறார் இயேசு (யோவா 15:13)."இயேசு கிறிஸ்து செல்வராய் இருந்தும் நமக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நாம் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (காண். 2 கொரி 8:9),

இப்படி தந்தையின் அன்பை முழுமையாகக் கிறிஸ்து வெளிப்படுத்தினார். இறைமக்கள்ளாகிய நாம் கடவுளின் அன்பை மையப்படுத்தி வாழ அழைக்கப்படுகின்றோம். கடவுளின் மக்களாகவே வாழ அழைக்கப்படுகின்றோம். எனவே இறைமக்களாகிய நாம் அனைவரும் கிறிஸ்துவின் அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து கடவுளை முழுமையாக அன்பு செய்ய வேண்டும்.

கடவுளின் சாயலில் உள்ள ஒவ்வொரு நபர்களிடமும் அன்பு செய்து வாழ வேண்டும். அன்பில்லாத ஒருவர் கடவுளை அறிந்து கொள்வதில்லை ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்.

கடவுள் அன்பிலிருந்து எதுவும் பிரிக்காதவண்ணம் செயற்பட முயற்சி செய்வோம்.

இனியவன்...

# பிறரது வேதனைகளை உணர்வதன் மூலமே உயிர்ப்பு விழாவில் பிரவேசிக்க முடியும்

## ஆயர் ரேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை

தவக்காலத்தில் பிறரது வேதனைகளையும், கவலைகளையும் கண்ணீரையும் நாம் புரிந்து கொள்வதன் மூலமே எதிர்வரும் உயிர்ப்பு விழாவிற்கு நாம் பிரவேசிக்க முடியும் என காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ரேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை தெரிவித்தார்.

தவக்காலத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களினால் கொழும்பு கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தவக்கால 'பசம்' கீத நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட அவர்,

“நாம் முயற்சி செய்தால் எம்மால் மாற்றங்களை கொண்டு வர முடியும். எமது சுயநலம் மற்றும் இருளில் பயணிப்பதனால் எமது காதுகள் செவிடாக்கியுள்ளன.

நாம் பொதுவாக நிகழ்வுகளில் இணைகின்றோம். பாரிய திருவிழாக்களை கொண்டாடுகின்றோம்.பெரும் செலவு செய்து சோடனைகளை செய்கின்றோம் இரக்கப்பட வேண்டியவர்களுக்கு இரக்கப்படாவிட்டால் அவர்களின் குரலுக்கு நாம் செவிமடுக்காவிட்டால் இவை எதிலும் அர்த்தமில்லை.

நான் இறைவனை மன்றாடுவதெல்லாம் நான் இறப்பதற்கு முன் இவ்வாறான மக்களை சந்திக்க வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும். அதனையே நான் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். தேவதாயாரைப் போன்று உருக்கமான பொழுதில் அந்த கண்ணீர் என் போன்றவர்களுக்கும் வருகிறது. தவக்கால கீதங்கள் அல்லது நிகழ்வுகள் அதன் சோடனைகள் சிறப்பு பற்றியல்ல சிறந்ததொரு செய்தியையே சமூகத்திற்கு



எடுத்துச் செல்ல வேண்டும். இந்த தவக்காலத்தில் பிறரது முகத்தில் காணும் வேதனைகள், கவலைகள் கண்ணீர் ஆகியவற்றுக்கான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியுமானால் அதன் மூலமே எம்மால் உயிர்ப்பு விழாவில் பிரவேசிக்க முடியும் அதற்கான எனது பிரார்த்தனைகள் தொடரும்.”

லோரன்ஸ் செல்வநாயகம்...



# நாவலப்பிட்டிக்கு புதிய ரயில்வே உதவி வர்த்தக அத்தியட்சகர் அலுவலகம்

நாவலப்பிட்டியில் புதிய ரயில்வே உதவி வர்த்தக அத்தியட்சகர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதனை அண்மையில் திறந்து வைத்தார். ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளைக் கண்காணிக்கும் பணிகள் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறிப்பாக ரம்புக்கணையிலிருந்து மாத்தளை மற்றும் பதுளை வரையான காணிகளில் வர்த்தக நிலையங்கள் மற்றும் திரையரங்குகள் உட்பட வர்த்தக செயற்பாட்டு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

நாட்டின் ரயில்வே துறையின் வரலாற்றை மாற்றும் ஒரு முக்கியமான தினத்தில் நாம் இருக்கிறோம். காலனித்துவ காலத்தில் பிரித்தானியர்களால் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத சேவை பதுளைக்கு ஆரம்பிக்கப்பட்டு ஏப்ரல் 05 இல் நூறு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

நூறு வருடங்களுக்கு முன்னர் இதன் ஊடாக ரயில் பதுளை புகையிரத நிலையத்தை சென்றடைந்துள்ளது. நாட்டிலேயே அதிகளவான காணிகளை வைத்திருக்கும் துறையாக ரயில்வே துறை உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



# இன்றைய பலன்கள் (12.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** சக பணியாளர்கள் சிலர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். சொந்த தொழில் செய்பவர்கள் என்னதான் முயற்சி செய்தாலும் ஓரளவே முன்னேற்றம் காணப்படும் .

**ரிஷபம் :** உத்தியோகத்தில் சிலர் எதிர்பார்த்து காத்திருந்த இடமாற்றம் பதவி உயர்வு போன்றவற்றை பெறுவதில் தடங்கள் ஏற்படும். இருப்பினும் எதிர்பாராத வருமானத்தால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மிதுனம்:** உத்தியோகத்தர்கள் நினைத்தபடி நன்மைகளை அடைவார்கள். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் முன்னேற்றத்தை காண்பார்கள்.

**கடகம்:** தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் பெரிய திட்டங்களை நிறைவேற்றி வெற்றி காண்பீர்கள். எனவே தயக்கம் இன்றி முயற்சியில் ஈடுபடுவது நல்லது.

**சிம்மம்:** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கும். தொழில் செய்பவர்கள் படிப்படியாக வளர்ச்சி பெறுவதோடு திருப்தியான பண வருவாயும் பெறுவீர்கள்.

**கன்னி:** தொழில்துறையில் இருப்பவர்கள் ஓரளவு வளர்ச்சியை காண்பார்கள். வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது மிகவும் அவசியம்.

**துலாம்:** தொழிலில் மிகுந்த கவனம் தேவை. மனைவியின் உடல்நலத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திருப்தியான வகையில் பணிகள் நடைபெறும்.

**விருச்சிகம்:** மாணவர்கள் படிப்பில் அதிக ஆர்வம் காட்டுவர். தொழில் செய்பவர்கள் கடுமையான முயற்சியை மேற்கொண்டாலும் பெரிய அளவில் லாபம் எதையும் எதிர்பார்க்க இயலாது.

**தனுசு:** உத்தியோகத்தர்கள் தங்கள் அன்றாட பணிகளில் கவனம் செலுத்தி வருவது நல்லது. உயர் அதிகாரிகள் உங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை வளர்த்துக் கொள்ளும் அளவிற்கு பணி செய்தால் வேண்டிய சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்:** உயர் அதிகாரிகளின் நம்பிக்கையை பெற மிகுந்த கவனத்துடன் செயல்படுவது வழிவகுக்கும். தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

**கும்பம்:** தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் திருப்தியை கருதிற் கொண்டு செயல்படுங்கள். மூலப் பொருட்களை வாங்கி சேமித்து வைப்பது நல்லது.

**மீனம்:** நீண்ட நாள் நிலுவையில் உள்ள ஊதிய உயர்வு கைக்கு கிடைக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் துறையின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைப்பார்கள்.

# ரமழான் மாத உபதேசங்கள்: உலமாக்களுக்கு பயிற்சிப்பட்டறை





(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

கதீப்மார்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை பெரியபள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. புனித ரமழானை முன்னிட்டு, அகில இலங்கை ஜெம்மியத்துல்உலமா சபையின் அக்கரைப்பற்று கிளையினர், அக்கரைப்பற்று ஜும்மாப் பெரியபள்ளிவாசல் அனுசரணையுடன் இந்த பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்வு அக்கரைப்பற்று ஜெம்மியத்துல் உலமா சபையின் தலைவர் கலாநிதி எம் ஐ எம் சித்தீக் (இன்ஆமி) தலைமையில் நடைபெற்றது. கொழும்பு திறந்த பல்கலைக்கழக முன்னாள் கல்வித்துறை பீடாதிபதி பேராசிரியர் பீ.சீ. பக்கீர் ஜௌபர், பாணந்துறை இப்னு உமர் இஸ்லாமிய உயர் கற்கைக்கான நிறுவனத்தின் பிரதி அதிபர் அஸ்ஷேய்க் அல்ஹாபீல் எம்.எப் ரியாஸ் முப்தி, ஓமான் தோபார் பல்கலைக்கழக உளவளத்துறை பேராசிரியர் பேராசிரியர் எஸ் அப்துல் றஊப் ஆகியோர் பிரதான வளவாளர்களாக இதில் கலந்துகொண்டனர். இதில், உலமாக்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## விமல் வீரவன்ச எம்பியுடன் சீன தூதரக கவுன்சிலர் சந்திப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கும் இலங்கையிலுள்ள சீன தூதுவராலயத்தின் கவுன்சிலர் Chen Xiangyuan வுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. தேசிய சுதந்திர முன்னணியில் தலைமையகத்தில் இடம் பெற்றுள்ள மேற்படி சந்திப்பில், சீன தூதுவராலயத்தின் இரண்டாவது செயலாளர் Jin Enze, தேசிய சுதந்திர முன்னணியின் வெளி விவகார உறவுகளுக்கான செயலாளர் டாக்டர் சுமித் வன்னியாரச்சி ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

## ஹரக்கட்டாவுக்கு...

அவரை இம்மாதம் (20) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர், நேற்று ஹரக்கட்டாவை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்திருந்தனர்.

## வெளிப்படைத் தன்மையுடன்...

அமுல்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அதற்கான விரிவான கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அஸ்வெசும: இரண்டாம் கட்ட...

அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளுக்கான இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம், இம்மாதம் 15 உடன் நிறைவடையுள்ளது. அந்த வகையில் தற்போது இரண்டு மில்லியன் பயனாளிகள் அஸ்வெசும கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையை 2.4 மில்லியனாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவதற்காக 205 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாடு அனுப்புவதாக...

பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம்மோசடி சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; யாழ்ப்பாண நகர் பகுதியை அண்மித்த பகுதியில் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்துள்ள இப்பெண், வெளிநாடு செல்வோருக்கான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றை வழங்கியுள்ளார்.

மேலும்,விசா தொடர்பிலான தெளிவூட்டல்கள் மற்றும் தொழில்களைப் பெறும் முறைகள் பற்றிய விபரங்களை வழங்கி இதற்காக கட்டணமும் அறவிட்டுள்ளார்.

சேவைகளை கட்டணம் பெற்று வழங்கி வந்துள்ளார்.

இப்பெண்ணை நம்பி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களைச் சேர்ந்தவர்களும் பணம் வழங்கி சேவைகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர்,வெளிநாடு செல்வதற்காக 60 ரூபாவை வழங்கியுள்ளார்.

பணத்தை வழங்கியவர் தனது வெளிநாட்டு, பயண ஏற்பாடுகள் தாமதமாகி வந்தமையால், அப்பெண் மீது சந்தேகம் கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அப்பெண்ணை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது அவரது வங்கி கணக்கு இலக்கம் ஊடாக சுமார் 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்தது.

கொழும்பு உள்ளிட்ட இதர பகுதிகளில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் முகவர்களாக செயற்படும் மோசடியாளர்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமக்கான முகவர்களாக சிலரை நியமித்து அவர்களூடாக பணம் மோசடியில் ஈடுபட்டு வருவதாக எச்சரித்துள்ள பொலிஸார் அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

## பாதாளக்கோஷ்டி 43 பேருக்கு...

இதனை தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த காவல்துறை ஊடகப் பேச்சாளர், பாதாள குழுக்களில் அடையாளம் காணப்பட்ட மேலும் பலருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பெறப்பட உள்ளன. துபாயில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள கும்பலைச் சேர்ந்த "மன்னா ரமேஷ்" தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இது குறித்து துபாய் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

## விமானப்படையில் சேர்வதற்கு...

கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இங்கு உரையாற்றிய அவர்:

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக விமானப்படைக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது வரைக்கும் 250 இளைஞர்கள் விமானப்படையில் சேர விண்ணப்பித்துள்ளனர்.

இக்கண்காட்சியானது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இது, விமானப்படைக்கும் யாழ்ப்பாண சமூகத்திற்கும் இடையிலான உறவுகளில் ஒரு சாத்தியமான போக்கையும் உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வானது கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான களமாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார் .

யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் மைதானத்தில் நடந்த இராணுவத்தின் கண்காட்சி நிகழ்வுகள் பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

## தங்கத்தின் விலையில் நேற்று...

(11) தங்க நிலவரத்தின்படி, தங்க அவுன்ஸ் விலை 671,295 ரூபாவாக பதிவாகியுள்ளதோடு, 24 கரட் 1 கிராம் தங்கத்தின் விலை 23,680 ரூபாவாக பதிவாகியுள்ளது.இதன்படி 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 189,450 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோன்று, 22 கரட் 1 கிராம் தங்கத்தின் விலை ரூபாய் 21,710 அதற்கமைய 22 கரட் தங்க கிராம் பவுண் ஒன்று 173,700 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவன...

தெரிவித்துள்ளார். அந்த வகையில் எதிர்வரும் 6 மாதங்களுக்குள் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், இக்காலங்களில் மேற்படி நிறுவனம் தேவையற்ற செலவுகளைக் குறைத்து நிதி வினைத்திறனை ஏற்படுத்திக் கொள்வது அவசியமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரிய வகை சத்திர சிகிச்சை செய்து...

பூரண குணமடைந்து வருவதாக குறித்த ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.72 வயதான முத்து மெனிக்கே என்ற பெண்மணிக்கே இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.நீண்ட காலம் இதற்கான பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டும் அவரது நோய் குணமடையவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பெண்ணின் நோயை தெளிவாக இனங்கண்டுள்ள பதுளை போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை மருத்துவர் லக்மால் ஹேவகே, மேற்படி பெண்மணிக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

இந்த அரிய வகை சத்திர சிகிச்சையானது இதுவரை இலங்கையில் மேற்கொள்ளப்படாத மிகவும் அரிதான சத்திர சிகிச்சை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எண்டோஸ்கோபிக் முறையில் முதுகுத்தண்டில் மேற்கொள்ளப்படும் இந்த அறுவை சிகிச்சை தனித்தன்மை வாய்ந்தது.மயக்க மருந்து இல்லாமல் குறித்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மருத்துவத்துறை வளர்ச்சியில் இச்சத்திரசிகிச்சை புதிய மைக்கல்லாக அமையுமென மருத்துவத்துவமனை வட்டாரங்கள் குறிப்பிடுக்கின்றன.

## மத மாற்றத்துக்கு எதிராக சட்டம்...

நிறுவனங்களை சோதனையிடுவதற்கும் இதற்காக பொலிஸாரின் உதவியை நாடுவதற்கும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. வலிந்து அல்லது திணித்து மத மாற்றங்களைத் தூண்டும் செயற்பாடுகள் சமூக இணக்கப்பாட்டுக்கு ஆபத்தாக அமைகிறது.இதனால், இவ்வாறான செயற்பாடுகள் தடுக்கப்படவுள்ளன.

சமய வழிபாட்டுத் தலங்கள்,பிக்குகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும், மதச் சீர்கேடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சருடன் சங்க நிக்காயக்க தலைவர்கள் கலந்தாலோதசித்தனர்.

விமான அனுமதிப்பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டையில் பிக்குகள் மற்றும் கன்னியாஸ்திரிகளின் பெயர்களை உள்ளிடும்போது, பிக்குகளுக்கு வெனரபிள் என்றும், கன்னியாஸ்திரிகளுக்கு ரெவரெண்ட் என்றும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

## விலங்குகளிடமிருந்து... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த வருடத்தில் ஆயிரம் வாயு துப்பாக்கிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு 50 வீத கடன் நிவாரண அடிப்படையில் இந்த வாயு துப்பாக்கிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வன விலங்குகளிடமிருந்து விவசாயப் பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த வாயு துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்,

நாட்டில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையில் 40 வீதமானவற்றை குரங்குகள், மர அணில்கள், மயில்கள் உள்ளிட்ட பட்சிகள் அழிக்கின்றன.என்பதை ஹெக்டர் கொப்பேகடுவ, கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன ஆய்வுகள் மூலம் இது, இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யுக்திய நடவடிக்கைகளில் இராணுவ...

இராணுவத்தினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கும் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் யுக்திய நடவடிக்கைகளில் நேற்று முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாக காணப்படும் போது சோதனை நடவடிக்கைகளை முறைப்படி மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். குறிப்பாக வீதி மறியல் போன்றவற்றை கட்டுப்படுத்துதல் மற்றும் கடுமையான குற்றவாளிகளை கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளின் போது அந்த மாகாணத்திற்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் ஊடாக இராணுவத்தினரை தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய வாகனப் பதிவுகள்;...

வாகனங்களும் கடந்த ஆண்டில் 23, 698 வாகனங்களும் இவ்வாறு புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதே வேளை, மேற்படி காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுகளும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## யானை வேலிகளைப் பாதுகாப்பதற்காக...

நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே,அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்;

“சர்வதேச காடுகள் தினம் மார்ச் 21 இல், கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு , நாடளாவிய ரீதியில் சகல வீடுகளுக்கும் தலா ஒரு செடியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் வனப்பரப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்த நிலப்பரப்பில் காடுகளை 32 வீதம் வரை அதிகரிப்பதற்காக காடுகள் எல்லை நிர்ணயம் செய்யப்படவுள்ளன.இப்பணிகள் இவ்வருடத்தில் நிறைவடையும்.உமாஓயா முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,000 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாக நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உமாஓயா பகுதிக்கு 45எம்.சி.எம். குடிநீரை வழங்கவும், 120 மெகாவோட் நீர்மின்சாரத்தைப் பெறவும் பரீட்சார்த்தப் பணிகள் நடைபெற்று வருகிறன.இதில், 120 மெகாவோட் நீர் மின் உற்பத்தியும் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

1500 கி.மீ வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ்;

# முக்கிரியாவ பிரதான வீதிக்கு கார்பட் இடும் பணிகள் ஆரம்பம்

அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு இஷாக் எம்.பி நன்றி

**கெக்கிராவ குறூப் நிருபர்**

ஹொரொவபொத்தான தேர்தல் தொகுதிக்குட்பட்ட கலன்பிந்துனுவெவ முக்கிரியாவ கிராம பிரதான வீதிக்கு கார்பட் இடும் பணிகள் நேற்று முன்தினம் (10) பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சேதமடைந்த நிலையில் காணப்படும் முக்கிரியாவ கிராம வீதியினால் அக்கிராம மக்கள் போக்குவரத்து செய்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் குறித்த வீதியின் நிலை பற்றியும் அதனை செப்பனிடுவதன் அவசியம் பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.



மேற்படி விடயம் தொடர்பில் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தனவின் கவனத்திற்கு கொண்டு வந்த பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், புனர் நிர்மாணம் செய்வதற்கான நிதியொதுக்கீட்டினையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அந்தடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் 1500 கி.மீ வீதிகளை அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டத்தின் கீழ் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய முக்கிரியாவ பாடசாலை சந்தி முதல் இலுக்வெவ சந்தி வரையிலான 2 கி.மீ வீதியினை கார்பட் இடும் பணிகள் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாதை புனர்நிர்மாணம் செய்யப்படுவதன் மூலம் முக்கிரியாவ, தஹனக்வெவ, இஹல ஹல்மில்லேவ, கெலே நிக்கவெவ ஆகிய ஊர்களை சேர்ந்த மக்கள் சிரமமின்றி பயணம் செய்யக்கூடியதாக இருக்கும்.

# 'Aquinas College' மாணவர்கள் ஜாவத்தை பள்ளிவாசலுக்கு நல்லெண்ண விஜயம்





பொரளை 'Aquinas College' கல்லூரி விரிவுரையாளர்கள் உட்பட மாணவ, மாணவிகள் சுமார் 50 பேர் கொண்ட குழுவினர் கொழும்பு 05, ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு வருகை தந்து முஸ்லிம்களின் மத, கலாசார விழுமியங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடி தெளிவை பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் வெள்ளவத்தை இஸ்லாமிய கற்கைகள் நிலையத்தின் பிரதான ஆலோசகர் அஷ்ஷெய்க் முனீர் முளப்பர் (நளீமி) கலந்துகொண்டு வழிநடாத்தினர். இதன்போது கலந்துகொண்டோருக்கும் சிங்கள மொழிபெயர்ப்பு குர்ஆன் பிரதிகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.



# Blossom Lanka வின் Resin Art Golden awards 2024 விருது விழா







Blossom Lanka வின் Resin Art Golden awards 2024 விருது விழா நேற்று முன்தினம் (10) மகாவலி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகரும் இலக்கியப் புரவலருமான ஹாசிம் உமர் வெற்றியாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

# சிவலோகதாசன் சதுரின் மூன்று கவிதை நூல்கள்




சிவலோகதாசன் சதுரின் மூன்று கவிதை நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 19ஆம் திகதி மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. 'கொரோனா', 'கசக்கும் கவிதைகள்', 'குருதிச்சாரல்' ஆகிய கவிதை நூல்களே ஜீவநதி வெளியீடாக வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. காரைக்கவி கந்தையா பத்மநாதன் தலைமை தாங்கும் இந்நிகழ்வை அருணாச்சலம் சத்யானந்தம் தொகுத்து வழங்கவுள்ளார்.

இதன்போது நயவுரையை முனைவர் இராமநாதன் ஸ்ரீ ஞானேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

# ஹம்பாந்தோட்டையில் ரமழான் கால விசேட ஏற்பாடுகள் முன்னெடுப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

புனித ரமழானை முன்னிட்டு ஹம்பாந்தோட்டையிலுள்ள சகல பள்ளிவாயல்களிலும் ரமழானை வரவேற்பதற்காக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சகல பள்ளிவாயல்களிலும் தராவீஹ் தொழுகைக்கு பெண்கள் வருகை தரவுள்ளதால் பெண்களுக்காக பள்ளிவாயல்களில் விசேட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு சிரமதானம் மூலம் பள்ளிவாயல்கள் துப்புரவும் செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோல், மின் விளக்குகளினால் பள்ளிவாசல்கள் அலங்கரிக்கப்பட்டு கஞ்சி விநியோகிப்பதற்காக விசேட ஏற்பாடுகளும் அங்காங்கே செய்யப்பட்டுள்ளன. அத்தோடு, ரமழானை வரவேற்று சகல பள்ளிவாயல்களிலும் ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும் விசேட பயான் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வானிலை மாற்றத்தின் காரணமாக தற்பொழுது உஷ்ணமான காலநிலை நிலவி வருவதினால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்தும் வருகின்றனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு**

**சப்ரகமுவ மாகாண சபை**

**மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு 2024/2025 வருடங்களின் பாதுகாப்புச் சேவைக்கான பெறுகை அறிவித்தல்**

சப்ரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் சப்ரகமுவ மாகாண கமத்தொழில் திணைக்களத்திற்குரித்தான பின்வரும் அலுவலகங்களுக்கு 2024-05-16ஆம் திகதி முதல் 2025-05-15ஆம் திகதி வரையில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை | நிறுவனம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்விப் பிணை முறிக் கட்டணம் ரூபா |
| --- | --- | --- | --- |
| பாதுகாப்புச் சேவையை வழங்குதல் | கேகாலை மற்றும் இரத்தினபுரி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், எம்பிலிப்பிட்டிய, பலங்கொட, நிவித்திகல, ருவன்வெல்ல மற்றும் கேகாலை உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், வாகொல்ல மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையம், மாருக்வதுர பண்ணை, பெமினிவத்த மத்திய நாற்றுமேடை, கரபிஞ்ச மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், ரஜவக்க சேவை தொகுதிப்பு பயிற்சி நிறுவனம், Agri Fresh விற்பனை நிலையம் - வாகொல்ல, ஆய்வுகூட கட்டிடத் தொகுதி - வாகொல்ல எனும் நிறுவனங்களுக்கு | 3,500.00 | 160,000.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் கொள்வோர் சப்ரகமுவ மாகாண விவசாய அமைச்சிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் (தொலைபேசி இலக்கம் 045-2224425) 2024-03-12ஆம் திகதி முதல் 2024-04-01ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து பின்வரும் முகவரிக்கு கோரிக்கையொன்றைச் செய்து மேற்குறிப்பிடப்பட்ட கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

03. சகல கேள்விதாரர்களும் இந்தக் கேள்விக்கான மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடமிருந்து 2024-04-02ஆம் திகதி முதல் 2024-07-29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இரத்தினபுரி, புதிய நகரம், சப்ரகமுவ மாகாண சபை, காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சின் செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது குறித்த பெறுகையின் பெயரில் கேள்விப் பிணை முறியாக அமைச்சுக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024-04-02ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சபைக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து மீண்டும் கடிதவுறையொன்றில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

06. தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

07. சகல கேள்விகளும் 2024-07-01ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
**2024-03-12.**



## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## கேள்விக்கோரல்

**செவிப்புலன் கருவிகள், கண் வில்லைகள்கள் மற்றும் மூக்கு கண்ணாடிகளை வழங்குதல் - 2024**

**2024 ஆம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு செவிப்புலன் கருவிகள், கண் வில்லைகள்கள் மற்றும் மூக்கு கண்ணாடிகளை** கொள்வனவு செய்வதற்கு தகைமையுடைய வழங்குனர்களிடமிருந்து 2வது மாடி, D பகுதி, செத்சிறிபாய, II ம் நிலை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள முதியோர்களுக்கான தேசிய செயலக அலுவலகத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| வகை | அளவு | கேள்விப்பிணை (ரு) |
| --- | --- | --- |
| செவிப்புலன் கருவிகள் | 2,000 | 800,000.00 |
| கண் வில்லைகள்கள் | 2,000 | 160,000.00 |
| மூக்குக்கண்ணாடிகள் (குறும்பார்வை, நெடும்பார்வை) | 2,000 | 120,000.00 |

**பொது நிபந்தனைகள்**

1. செவிப்புலன் கருவிகள் மற்றும் மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிறுவனத்தின் கிளைகள் நாடளாவிய ரீதியில் அமைந்திருப்பது அத்தியாவசியமாகும்.
2. கோள்விப்பத்திரங்களை **2024.03.12** ஆம் திகதி முதல் **2024.03.28** ஆம் திகதி வரை வாரநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரை முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதிப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது **www.srilankaeldercare.gov.lk** எனும் இணையத்தளத்தில் News எனும் இடத்தை அழுத்தி கேள்விப்பத்திரங்களை பதிவிறக்கம் download செய்யலாம்.
3. மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, கேள்வி பிணைக்காக கேள்விப்பத்திரங்களில் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தின்படி, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிலிருந்த பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப்பிணை **2024.06.30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
4. முத்திரையிடப்பட்ட கேள்விகள், **2024.03.28 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், கொள்முதல் குழு, முதியோர்களுக்கான தேசிய செயலக அலுவலகம், 2வது மாடி, D பகுதி, செத்சிறிபாய, II ம் நிலை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும் அல்லது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுக்கள் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடவும். அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விக்கோரல் சமர்ப்பிக்கும் வகையினை தெளிவாக குறிப்பிடவும். கேள்விக்கோரல் திறக்கும் நடவடிக்கையானது அன்றைய தினம் **பி.ப.2.00** மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும். அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**வழங்கல் குழு,**
**முதியோர்களுக்கான தேசிய செயலகம்,**
**2ஆம் மாடி, D பகுதி,**
**கட்டம் II, செத்சிறிபாய,**
**பத்தரமுல்லை.**
**2024.03.12**

SEL ACINE

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி பூங்கா மைதானத்தில் மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவனரும் இயக்குனரும் கொவிட் தடுப்பூசிகளை தயாரித்து 600 மில்லியன் மக்கள் உயிரை காத்தவருமான திருமதி சுசித்ரா எல்ல ஆளுநரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி துறையில் சாதித்த பெண்கள், Rural development society, பெண்கள் அமைப்புகள் போன்ற பல சாதனைகளை நிலைநாட்டிய பெண்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றதுடன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் உட்பட அரச உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துக் கொண்டனர்.

## அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகள் தொல்லை

### போக்குவரத்துக்கு இடையூறு



**(ஒலுவில் விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் அதிகரித்து வரும் காட்டு யானைகள் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில், காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், ஆலிம்நகர், ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆகிய பின்தங்கிய பிரதேசங்களில் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் மக்கள் எந்நேரமும் பீதியுடன் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். இரவு வேளையில் வீதிக்கு வரும் யானைக் கூட்டத்தினால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் அச்சம் காரணமாக இரவு நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம், வீட்டுத்தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். யானைத் தொல்லையை கட்டுப்படுத்த இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பிரதேச செயலாளர்கள், வனஜீவராசி திணைக்களத்தின் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கேட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு ஒருமுழச்சோலையில் 2 மெகாவோற் சூரிய மின்சக்தி நிலையம்





ஏறாவூர், கொம்மாதுறை வடக்கு ஒருமுழச்சோலை கிராமத்தில் 2 மெகாவோற் சூரிய மின்சக்தி நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தனர்.

இது இலங்கை மின்சார சபையின் 90 மெகாவோற் ஒப்பந்த நடைமுறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளதாகவும் வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது நாட்டின் மின்சார உற்பத்திக்கு பாரிய பங்களிப்புச் செய்து வரும் வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஊடாக மட்/ககு/ஒருமுழச்சோலை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் உட்கட்டுமான பணிகளுக்காக ரூ. 5 இலட்சம் நிதியுதவியை அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து பெற்றுக்கொடுத்தனர்.

கடந்தகாலங்களில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு, மின் துண்டிப்பு, உற்பத்தியில் வீழ்ச்சி போன்றவற்றை கருத்திற் கொண்டு பல மாற்று மின் உற்பத்தித் திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அனுமதியின் ஊடாக, வருடாந்த மின் உற்பத்தியில் 20 மெகாவோற் மின்சாரத்தைப் பிறப்பிக்கத்தக்க, விவசாய செய்கையுடன் கூடிய 10 மெகாவோற் சூரிய மின்சக்தி நிலையம் வவுணதீவு நாவற்காடு கிராமத்தில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் ஊடாக நாட்டின் மின்சார உற்பத்திக்கும், மின் துண்டிப்பில்லாத ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கும் இதுபோன்ற திட்டங்கள் பெரும் உதவியாகவிருக்குமென தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் SLSEA இன் தலைவர், பொறியியலாளர் ரஞ்சித் சேபால, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் தனபாலசுந்தரம், சோலார் நிறுவனத்தின் பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## விவசாய அமைப்புக்களின் ஒருங்கிணைப்பில் நிந்தவூரில் யானை பாதுகாப்பு நடவடிக்கை





**(நிந்தவூர் குறூப் நிருபர்)**

அரச நிதிப்பங்களிப்பின்றி நிந்தவூரில் யானை பாதுகாப்பு மையம் மற்றும் யானை வேலி ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசமானது விவசாயச் செய்கைக்கு பிரசித்திப் பெற்றது. எனினும் இப்பிரதேச விவசாயிகளும், பொதுமக்களும் கடந்த 15 வருட காலமாக காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனினும் உரிய தரப்பினர் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை இதுவரை வழங்கவில்லை.

நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் 14 விவசாய அமைப்புக்களை உள்ளடக்கியதாக செங்கப்படை விவசாய அமைப்புகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், யானை பாதுகாப்பு மையம் மற்றும் யானை வேலி என்பன அமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வு நிந்தவூர் மாலிண்ட திடலில், செங்கப்படை விவசாய அமைப்புக்களின் சம்மேளன தலைவர் சட்டத்தரணி ஏ.எம். நசீல் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேசத்தின் தெற்கே அமைந்துள்ள களியோடை ஆற்றின் பள்ளக்காடு பிரதேசம் யானைகள் உட்பிரவேசிக்கும் இடம் என்பதால், அதை கட்டுப்படுத்தும் முகமாக பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் அவ்விடம் தெரிவுசெய்யப்பட்டது.

இத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகளில் யானை பாதுகாப்பு மைய நிலையத்திற்கான நிரந்தர கட்டடமொன்றினை அமைத்து, அதன் மூலம் யானைகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்காக நிந்தவூர் பிரதேச செயலகமானது 40 பேர்ச் காணியை வழங்கியுள்ளது. இதில் 20 பேர்ச் காணியில் முதற்கட்ட வேலைகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளதுடன், இவைகள் 03 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் சுமார் 6,500 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில், தலா ஒவ்வொரு ஏக்கருக்கும் ஆயிரம் ரூபா வீதம், காணிச்சொந்தக்காரர்கள் தங்களது நிதிப்பங்களிப்பை வழங்கினர்.

இதில் சுமார் 09 கிலோமீற்றர் தூரத்தில் யானை தடுப்பு வேலி அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான முழுமையான வழிகாட்டல்களையும், தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பிரதேச செயலகம் வழங்கியிருந்தது. இதன் முதற்கட்டமாக 3.5 கிலோமீற்றர் தூரத்துக்கு யானை தடுப்பு வேலி அமைக்கப்பட்டிருப்பது இத்திட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகும்.

## பெரியகல்லாறு ஒலிம்பியா விளையாட்டு கழகத்தின் பி.பி.எல்.கிரிக்கட் திருவிழா

### துடுப்பெடுத்தாடிய பாராளுமன்ற உறுப்பினர்கள்

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**



மட்டக்களப்பு பெரியகல்லாறு ஒலிம்பியா விளையாட்டுக் கழகம் நடாத்திய பி.பி.எல். கிரிக்கட் திருவிழாவின் இறுதிப்போட்டி கழகத் தலைவர் ஆர்.கோபாலசிங்கம் தலைமையில் பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்ததுடன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கலந்து கொண்டிருந்த பிரதம அதிதி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் களத்திலே துடுப்பெடுத்தாடி கிரிக்கட் போட்டியை ஆரம்பித்துவைத்தனர்.

இப்போட்டியில் 4 கழகங்கள் கலந்து கொண்டிருந்ததுடன் இறுதிப்போட்டிக்கு கல்லாறு வெங்களோ கிங்ஸ் அணியும் பொட்டுறப்டர் அணியும் பங்குபற்றி விளையாடினர்.

10 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் பொட்டுறப்டர் அணியினர் 5 விக்கட் இழப்பிற்கு 119 ஓட்டங்களையும், கல்லாறு வெங்களோ கிங்ஸ் அணி 9.4 ஓவரில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். 71 மேலதிக ஓட்டங்களால் பொட்டுறப்டர் அணி வெற்றி பெற்றது.

இதில் பங்குகொண்ட வீரர்களுக்கு பணப்பரிசுகள் வழங்கப்பட்டதுடன் வெற்றி பெற்ற கழகத்திற்கு வெற்றிக்கேடயமும், பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் வாராந்த சந்தை கடைத்தொகுதிக்கு மாற்றம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பஸ் தரிப்பிட வளாகத்தில் மிக நெருக்கடியான நிலைமையில் நடாத்தப்பட்டு வந்த வாராந்த ஞாயிறு சந்தை வியாபாரங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (10) முதல் மக்களின் நலன் கருதி சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த கட்டடத் தொகுதிக்கு மூதூர் பிரதேச சபை நிர்வாகத்தால் மாற்றப்பட்டுள்ளன.

மேலும் மிக நீண்டகாலமாக உள்ளூர், வெளியூர் வர்த்தகர்கள் சந்தை வளாகத்தில் நடாத்தி வந்தனர்.

இதனால் பஸ் தரிப்பிடத்துக்கு வரும் பயணிகளும் பொது மக்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர். இதனை கவனத்திற்கொண்ட மூதூர் பிரதேச சபை நிர்வாகத்தினர் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் பெரும் பகுதியிலான வியாபாரங்களை திறந்த கட்டடத் தொகுதிக்கு மாற்றி இடநெருக்கடியை போக்கியுள்ளனர்.

## கிண்ணியா மத்திய கல்லூரிக்கு பஸ் வழங்கிவைப்பு



**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் சக்வள செயற்திட்டத்தின் ஊடாக கிண்ணியா மத்திய கல்லூரிக்கு பஸ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிண்ணியா மத்திய கல்லூரியில் பாடசாலை அதிபர் சட்டத்தரணி நஜாத் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதன்போது எதிர்கட்சி தலைவர் கௌரவ சஜித் பிரேமதாசவினால் பஸ் உத்தியோபூர்வமாக பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை தொகுதி அமைப்பாளர் கபில களுப்பான, சேருவில தொகுதி அமைப்பாளர் சரத் லோரன்ஸ், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தொழில் முயற்சி விழிப்புணர்வு

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் திருகோணமலை மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் நடத்தப்படும் 'தொழில் முயற்சி விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு செயலமர்வு' திங்கள், செவ்வாய், புதன்கிழமை (11,12,13) ஆகிய தினங்களில் Zoom இணைய வழியாக நடைபெறும்.

இத்திட்டத்தில் பிரதேச ரீதியாக இயங்கி கொண்டிருக்கும் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களின் அனுபவத்தை பெறும் வாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாதுகாப்பு தரப்பினர் வசமுள்ள எஞ்சியுள்ள காணிகளும் சில மாதங்களுக்குள் விடுவிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

பாதுகாப்பு தரப்பினரிடம் மட்டுமல்லாது வன ஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு திணைக்களத்தின் கீழுள்ள காணிகளும் விரைவில் விடுவிக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக பாதுகாப்பு தரப்பினரது கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களின் ஒரு தொகுதி காணி நிலங்கள் உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முப்படையினரும் மக்களுக்காகத் தான் சேவை செய்வதாக யாழ். மாவட்ட கட்டளை தளபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே எனது கருத்து இதுவாகத்தான் இருந்தது. அதாவது பாதுகாப்பு தரப்பினர் எமது மக்கள் படையாக மக்களுக்கான படையாக செயற்படுவர் என்றும் செயற்பட வேண்டும் என்றும் கருத்தை நான் முன்வைத்திருந்திருக்கின்றேன்.

இதேநேரத்தில் எமது மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் எஞ்சியுள்ளன. நிச்சயமாக அந்தக் காணிகளும் விடுவிக்கப்படும். அதாவது காணி விடுவிப்பு என்கின்ற போது முப்படை மற்றும் பொலிஸார், வன ஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு திணைக்களத்தின் கீழுள்ள காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

இதேநேரம் ஜனாதிபதி தெளிவாக கூறியிருக்கின்றார். 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறு காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



அதனடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் இறுதிப்பகுதியில் அவ்வாறான காணிகள் விடுவிக்கப்படும் என்பதை நான் முழு நம்பிக்கையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# வடக்கின் உதயம்

## காரைநகரில் கைதான தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காரைநகர் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்ததுடன், அவர்களின் மூன்று படகுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தினர்.

அதனை தொடர்ந்து அவர்கள் 22 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## ஏ 9 வீதியில் விபத்து; ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி தபால் நிலையச் சந்தியில் ஏ 9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சிறு காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளுடன் கார் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்ததுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் சிறுகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 33 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் வலி. வடக்கு மக்கள் குடியேறினர்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 33 வருடகாலமாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாகவிருந்த சுமார் 67 ஏக்கர் காணி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டது.

அவற்றுள் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள காணிகளுக்குள் செல்ல இராணுவத்தினர் நேற்றைய தினம் அனுமதி வழங்கினர்.

காங்கேசன்துறை தெற்கு 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும், மயிலிட்டி தெற்கு





(தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நேற்றைய தினம் விடுவிக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலான காணிகளிலிருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறாத நிலையில் இன்னமும் ஓரிரு நாட்களில் காணிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் உங்கள் காணிகளுக்குள் நீங்கள் வர முடியும் என தம்மை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 2500 ஏக்கர் காணிகள் இராணுவம் வசமுள்ளன

(புதுக்குடியிருப்பு விசேட, மாங்குளம் குரூப், ஓமந்தை விஷேட நிருபர்கள்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரிடம் இருந்து 2500 ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கப்படவிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் தங்கள் காணிகளை எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தி ஜனாதிபதிக்கும் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் நேற்றைய தினம் மனுவொன்றை கையளித்துள்ளனர்.

இதன்போது மக்களிடம் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்த முகாம்கள் அகற்றப்படும் என்ற விபரம் கிடைத்துள்ளது. காணி விடுவிப்பு தொடர்பில் இரண்டு கிழமைக்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 2500 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிக்கப்படவுள்ளன.



1500 ஏக்கர் வரையில் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மேய்ச்சல் நிலத்தை விடுவித்து தருமாறு கோரி மகஜர் கையளிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் திருவையாறு இரத்தினபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் தமக்கான மேய்ச்சல் தரவையை விடுவித்து தருமாறு கோரி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மகஜரொன்றை கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகை குளம் பகுதியில் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை தனியார் ஆக்கிரமித்து வருவதனால் தங்களுடைய கால்நடைகளை பராமரிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். கால்நடைகளை பராமரிக்கக்கூடிய வகையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை பெற்றுத்தருமாறு மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்று மகஜரொன்றை கையளித்துள்ளனர்.

அதனைதொடர்ந்து கரைச்சி பிரதேச செயலாளரிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது.

## கசிப்புடன் சிறுவன் கைது

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் சரசாலை பகுதியில் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் கசிப்புடன் 15 வயது சிறுவனொருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சிறுவனை கைதுசெய்து சோதனையிட்ட போது, சிறுவனின் உடைமையிலிருந்து கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சிறுவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் , சிறுவனிடம் கசிப்பை கொடுத்த நபர்களை அடையாளம் கண்டு அவர்களை கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## கேரள கஞ்சாவுடன் இளம் பெண் கைது

(ஓமந்தை விஷேட நிருபர்)



முல்லைத்தீவில் நேற்று கேரள கஞ்சாவுடன் தாழையடி பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணொருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆனையிறவு தாழையடி பகுதியை சேர்ந்த 27 வயதுடைய பெண்ணை இவ்வாறு கைது செய்துள்ளனர்.

நேற்று காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற கைது சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் இராணுவத்தினர், விசேட அதிரடி படையினர, பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த தனியார் பஸ்சை வழிமறித்து சோதனையை மேற்கொண்ட போது பெண்ணிடமிருந்த கைப்பையில் 500 கிராம் கேரள கஞ்சாவை கடத்தி செல்ல முற்பட்ட சமயத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இப் பெண்ணை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

## சுருக்கு வலையை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது

(நாகர்கோவில் விசேட நிருபர்)

சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை (11) காலை 06.15 மணியளவில் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் சுருக்கு வலை பாவிக்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற கடற்படையினர் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

# மலைச்சாரல்

## போதைப்பொருளுடன் இருவர் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

கட்டுகஸ்தோட்டை பகுதியில் 45 கிராம் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் இக்கைது இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 'குஷ்' என்ற போதைப் பொருள் விற்பனை செய்யும் ஒருவர் பற்றி கிடைத்த தகவலின் படி மிகவும் சூட்சுமமான முறையில் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

தமக்கு 100 கிராம் குஷ் போதைப் பொருள்தேவைஎனதெரிவித்தபோது தன்னால் 40 கிராம் அளவில் தர முடியுமென சந்தேகநபர் தெரிவித்துள்ளார். அதனையடுத்து விலையை தொலைபேசியில் பேசிக் கொண்டு சென்ற பொலிஸார் கண்டி, கட்டுகஸ்தோட்டை வீதியிலுள்ள வட்டாரந்தென்ன சந்தி என்ற இடத்திற்கு வரும் படி தெரிவித்துள்ளனர். அதன்படி அங்கு சென்ற போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளின் படி கண்டி ஹீரஸ்ஸகல என்ற இடத்திலுள்ள ஒருவர் அதனை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது 5 கிராம் குஷ் போதைப் பொருளுடன் அவரையும் கைது செய்துள்ளனர்.



"மலையகம் 200" ஞாபகார்த்தமாக தேசமான்ய உமா தீபனை தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தினால் தினகரன் பத்திரிகையின் 92ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கண்டி கெப்பிட்டிபொல மண்டபத்தில் 92 பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர். மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, தொழில் அதிபர் எஸ். இராஜபச்சம், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.
(படங்கள் : மாவத்தகம நிருபர், நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்கள்)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**

# பெறுகை அறிவித்தல்

மொனராகலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சுகாதார நிறுவனங்களுக்காக PSSP மற்றும் PSDG மானியத்தின் கீழ் பின்வரும் மருத்துவ உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரண உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**OFFICE PACKAGE**

**LAPTOP - Package No 01**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Laptop | 15 |

**DESKTOP COMPUTERS - Package No 02**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Desktop Computers | 10 |

**AC MACHINE - Package No 03**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | AC Machine (18000BTU) | 5 |

**Hospital Furnitures - Package No 04**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Office chair (Mid back) | 40 |
| 2 | Office Table | 30 |

**OTHER Furnitures - Package No 05**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Steel Glass Cupboard | 30 |
| 2 | Bar stools | 6 |
| 3 | Mattress | 15 |
| 4 | Dining Table With 4 Seats | 8 |

**OTHER EQUIPMENT - Package No 06**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | UPS 650V | 10 |
| 2 | UPS 1200V | 8 |
| 3 | UPS 1KV | 2 |
| 4 | Microphone for Zoom | 4 |

**HOSPITAL EQUIPMENT - Package No 07**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Refrigerator 250L | 3 |
| 2 | Pedestal Fan | 15 |
| 3 | Water Pump | 2 |
| 4 | Scale for kitchen | 5 |
| 5 | Water Boilers | 2 |
| 6 | Journey Mattress | 10 |

**TOOLS - Package No 08**

| No. | Equipment | QTY |
|---|---|---|
| 1 | Maintance unit tool kit | 3 |

**MEDICAL PACKAGE**

**MEDICAL PACKAGE 09**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 1 | Multipara Monitors with Capnograph neonatal probes (Advance) | 2 |

**MEDICAL PACKAGE 10**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 2 | Dental Chair | 2 |

**MEDICAL PACKAGE 11**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 3 | Micro Motor with contra angle hand piece | 8 |

**MEDICAL PACKAGE 12**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 1 | BP Apparators (Digital) | 15 |
| 2 | ECG machine | 10 |

**MEDICAL PACKAGE 13**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 1 | Pulse oxymeter | 10 |
| 2 | Pulse oxymeter with neonatal probes | 3 |

**MEDICAL PACKAGE 14**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 1 | Light cure machine | 5 |
| 2 | Cavitron scaler machine | 4 |
| 3 | Air roter hand piece | 10 |
| 4 | Mobile dental chair with stool | 5 |

**MEDICAL PACKAGE 15**

| No. | Equipment | Qty |
|---|---|---|
| 1 | Thermometer for Refregirator | 10 |
| 2 | Drugs counting machine | 3 |

**கேள்வி நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரர் இலங்கை வர்த்தக பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நபர் மற்றும் நிறுவனமாயிருத்தல் வேண்டும்.
02. மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் ஒரு கேள்வி மாதிரிப் படிவத்திற்கு (ஒரு பொதிக்கு) 3000.00 ரூபாவாகும் என்பதுடன் அப்பெறுமதிக்கான பணத்தைச் செலுத்தி கேள்வி மாதிரிப் படிவங்களை எமது அலுவலகத்தின் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிலிருந்து 2024-03-12ஆம் திகதி முதல் 2024-04-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
03. மீளளிக்கப்படும் கேள்விப் பிணைக் கட்டணம் ஒரு கேள்வி மாதிரிப் படிவத்திற்கு (ஒரு பொதிக்கு) கேள்விப் பெறுமதியின் 2% மாகும். இத்தொகையை வங்கிப் பிணை முறி மூலம் அல்லது ரொக்கப் பணமாக கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 120 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு 02 பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை இரு வேறு உறைகளில் இட்டு அதில் பொதி இலக்கத்தைக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் மீண்டுமொரு உறையில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘மருத்துவ உபகரணங்கள் வழங்கல் (பொதி இலக்கம்.........) 2024’’ / ‘‘அலுவலக உபகரணங்கள் வழங்கல் (பொதி இலக்கம்.........) 2024’’ எனக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 2024-04-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் முத்திரைக் குறி இடப்பட்ட கேள்விப் படிவங்களை ‘‘தவிசாளர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், சனசமூக நிலைய வீதி, மொனராகலை’’ எனும் முகவரிக்கு பதிவுப் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
06. கேள்விகள் 2024-04-03ஆம் திகதி மு.ப. 10.35 மணிக்கு திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. நிர்ணயிக்கப்பட்ட தினம், நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
09. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் பின்வரும் தொலைபேசி மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**சனசமூக நிலைய வீதி, மொனராகலை.**

**தொ.பேசி இல. 077-4733333**
**055-2276268**

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

# விலைகோரலுக்கான அழைப்பு (IFB)

## காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை

**(கடன் இல. 8996-LK)**

## விலைமதிப்பீட்டுக்கான கோரிக்கை (தேசிய ஒப்பீட்டு விலை)

1. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையின் (CResMPA) செலவை ஈடுசெய்வதற்காக மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD - உலக வங்கி) நிதியுதவியைப் பெற்றுள்ளது. திட்ட பெறுகைக் குழு, பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பணிகளுக்கு தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறது மற்றும் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் CResMPA இன் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியுதவியின் ஒரு பகுதியை பிரயோகிக்க விரும்புகிறது.
2. தகுதித் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடு(களை) பூர்த்தி செய்கிறார் என்பதை நிரூபிக்க ஆவண ஆதாரங்களை வழங்க வேண்டும்:
   - பொது அனுபவம் - ஒப்பந்ததாரர், உப ஒப்பந்ததாரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்ததாரரின் பாத்திரத்தில் ஒப்பந்தங்களின் கீழ் குறைந்தபட்சம் கடந்த ஆறு (06) வருட கால அனுபவம்.
   - குறிப்பிடத்தக்க அனுபவம் - ஒரு ஒப்பந்ததாரர், முகாமைத்துவ ஒப்பந்ததாரர் அல்லது உப ஒப்பந்ததாரராக பங்கேற்று கடந்த ஆறு (06) வருடங்களினுள் குறைந்தபட்சம் ஒரு (01) ஒத்த இயல்பு ஒப்பந்தத்தை வெற்றிகரமாகவும் கணிசமாகவும் நிறைவு செய்திருத்தல்.
   - கடந்த ஆறு (06) வருடங்களில் கட்டிட நிர்மாணம், கட்டிடங்களை புதுப்பித்தல் மற்றும் கட்டிடங்களை புனரமைத்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகளில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்குவிதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான விலைமதிப்பீட்டுக்கான கோரிக்கை (தேசிய ஒப்பீட்டு விலை) நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.
4. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொதிகளுக்கான ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத 3000.00 ரூபா தொகையை (ஒன்றில் ரொக்கப் பணமாகச் செலுத்தலாம் அல்லது செயற்றிட்டத்தின் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்ட தொகைக்கான வங்கிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து) கொழும்பு-05, இல. 11, ஜாவத்த வீதி, CResMPA, செயற்றிட்டப் பெறுகைக் குழுவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பொதிகளுக்கும் கொழும்பு-05, இல. 11, ஜாவத்த வீதி, செயற்றிட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடமிருந்து (PCT) அல்லது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளர் (DI) அலுவலகங்களிலிருந்து 2024 மார்ச் 12ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 01ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை (இரு பிரதிகளில்) கொள்வனவு செய்யலாம்.

   வங்கிக் கணக்கு விபரங்கள் பின்வருமாறாகும்.

   **கணக்கிலக்கம்** : 7042769
   **கணக்கின் பெயர்** : செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு, காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை
   **வங்கி** : இலங்கை வங்கி
   **கிளை** : டொரிங்டன் கிளை

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | விலை மனுக்கள் வழங்கப்படும் இடம் | ஒப்பந்த முடிவு றுத்தல் காலம் (நாட்கள்) | CIDA (கட்டிடங்களின் கீழ் ஆகக் குறைந்த தரம்) | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் | விலை மனுக்களைச் சமர்ப்பித்தல் |
|---|---|---|---|---|---|---|
| SLMOI/CRES/ID/W/S/09 | மாகுர அளவிடும் நிலையத்தில் வெளிக்கள அலுவலகத்தை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 175 | C7 | 2024.03.19 - மு.ப. 10.00 மணிக்கு | 2024.04.02 - மு.ப. 10.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/11 | பேராதனை அளவிடும் நிலையத்தில் வெளிக்கள அலுவலகத்தை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 175 | C7 | 2024.03.19 - மு.ப. 11.00 மணிக்கு | 2024.04.02 - மு.ப. 11.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/15 | இரத்தினபுரி வெளிக்கள அலுவலகத்தில் PVC முலாமிடப்பட்ட கம்பி வலை வேலியை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 91 | C9 | 2024.03.19 - ந.ப. 12.00 மணிக்கு | 2024.04.02 - ந.ப. 12.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/16 | துனமலே வெளிக்கள அலுவலகத்தில் படலையை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 91 | C9 | 2024.03.19 - பி.ப. 13.30 மணிக்கு | 2024.04.02 - பி.ப. 13.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/18 | பிட்டுபவுல வெளிக்கள அலுவலகத்தில் PVC முலாமிடப்பட்ட கம்பி வலை வேலியை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 91 | C8 | 2024.03.19 - பி.ப. 14.30 மணிக்கு | 2024.04.02 - பி.ப. 14.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/29 | கிளன்கோர்ஸ் அளவிடும் நிலையத்தில் வெளிக்கள அலுவலகத்தை நிர்மாணித்தல் | திட்ட அலுவலகம் - CResMPA | 175 | C7 | 2024.03.19 - பி.ப. 15.30 மணிக்கு | 2024.04.02 - பி.ப. 15.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/17 | குடாஓய வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - மொனராகலை | 175 | C8 | 2024.03.20 - மு.ப. 10.00 மணிக்கு | 2024.04.03 - மு.ப. 10.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/19 | கதிர்காமம் வெளிக்கள அலுவலகத்தில் படலை வேலியை நிர்மாணித்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - மொனராகலை | 91 | C9 | 2024.03.20 - மு.ப. 11.00 மணிக்கு | 2024.04.03 - மு.ப. 11.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/20 | வெள்ளவாய வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - மொனராகலை | 175 | C8 | 2024.03.20 - ந.ப. 12.00 மணிக்கு | 2024.04.03 - ந.ப. 12.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/21 | நக்கல வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - மொனராகலை | 175 | C8 | 2024.03.20 - பி.ப. 13.30 மணிக்கு | 2024.04.03 - பி.ப. 13.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/22 | சியம்பலாண்டுவ வெளிக்கள அலுவலகத்தில் படலையுடனான வேலி மற்றும் வெள்ள விளக்குக் கம்பத்தை நிர்மாணித்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - மொனராகலை | 91 | C9 | 2024.03.20 - பி.ப. 14.30 மணிக்கு | 2024.04.03 - பி.ப. 14.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/14 | தல்தென வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - பண்டாரவளை | 91 | C9 | 2024.03.20 - பி.ப. 15.30 மணிக்கு | 2024.04.03 - பி.ப. 15.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/23 | படல்கம வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - குருநாகல் | 175 | C8 | 2024.03.21 - மு.ப. 10.00 மணிக்கு | 2024.04.04 - மு.ப. 10.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/24 | கிரிஉல்ல வெளிக்கள அலுவலகத்தில் நீர் வழங்கும் இணைப்பை மேம்படுத்துதல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - குருநாகல் | 91 | C9 | 2024.03.21 - மு.ப. 11.00 மணிக்கு | 2024.04.04 - மு.ப. 11.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/26 | பத்தேகம வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - காலி | 175 | C8 | 2024.03.21 - ந.ப. 12.00 மணிக்கு | 2024.04.04 - ந.ப. 12.00 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/28 | நோர்வூட் அளவிடும் நிலையத்தில் வெளிக்கள அலுவலகத்தை நிர்மாணித்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - கண்டி | 175 | C7 | 2024.03.21 - பி.ப. 13.30 மணிக்கு | 2024.04.04 - பி.ப. 13.30 மணிக்கு |
| SLMOI/CRES/ID/W/S/30 | அம்பாறை வெளிக்கள அலுவலகத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் - அம்பாறை | 175 | C9 | 2024.03.21 - பி.ப. 14.30 மணிக்கு | 2024.04.04 - பி.ப. 14.30 மணிக்கு |

5. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2507855/ 0112058452.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் கொழும்பு-05, ஜாவத்த வீதி, காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை, கூட்ட அறையில் இடம்பெறும் என்பதுடன் மேற்கூறிய அட்டவணையில் திட்டமிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து விலைமனுதாரர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

   விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு முன் விலைமனுதாரர்கள் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பினால், உத்தேச வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு விலைமனுதாரர்கள் இயைபுடைய நீர்ப்பாசனப் பணிப்பாளர் (DI) அலுவலகத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் வேலைத்தள விஜயத்திற்கான திகதி மற்றும் நேரம் என்பன இயைபுடைய விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
7. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான திகதி மற்றும் நேரத்திற்கு முன் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது (CResMPA) பெறுகைப் பிரிவு அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேற்கூறிய அட்டவணையில் ஒவ்வொரு பொதிக்குமான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் காட்டப்பட்டுள்ளது. தாமதமாகச் சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

   கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு’’ என தயவு செய்து எழுதவும்.
8. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், தொழில் வழங்குநர் மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.

திகதி: 2024-03-12.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை,**
**இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு - 05.**
**தொ.பே: 011 2507855 / 011 2058452**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், வட மத்திய மாகாணம்
## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)
### PROJECT ID P-163305

1. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்தப் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   - கஹடகஸ்திகிலியவில் பாலர் பாடசாலை நிர்மாணம்.
   - வலிகந்த பி.ச. இல் செவனபிட்டிய நீர்த் திட்டத்தின் மேம்பாடு.
   - பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இபலோகம பி.ச. அலுவலகக் கட்டிடத்தின் 1ஆவது மாடியின் நிர்மாணம்.
   - கெகிராவ நகரில் பகல் பராமரிப்பு நிலையத்தின் நிர்மாணம்.
   - மிஹின்தலே மின்சார சபை வீதியின் மேம்பாடு.
   - கெபித்திகொல்லாவ வாராந்தச் சந்தையில் வர்த்தகக் கடையின் நிர்மாணம் (கட்டம் 01 மற்றும் கட்டம் 02).
   - கல்நேவ வாராந்தச் சந்தையின் மேம்பாடு.
   - பொலன்னறுவை மா.ச. இல் கல்லேல்ல **SWMGT** நிலையத்திற்கான 3 கடை அறைகளின் நிர்மாணம்.
   - நுவரகம பிரதேச கிழக்கு பி.ச. இல் ஜயபிர வரவேற்பு மண்டபத்தின் மேம்பாடு.
   - நுவரகம பிரதேச கிழக்கு பி.ச. இல் நெலுபேவவில் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கான 3 அறைகளின் நிர்மாணம்.
   - இபலோகம பி.ச. இன் மிஹிலிய துருல பொதுப் பூங்காவின் மேம்பாடு.
   - கல்நேவ பி.ச. இல் அவ்கன சபா உயன பொது பூங்காவின் மேம்பாடு.
   - திம்புலகல பி.ச. இல் சிரிபுற மற்றும் நுவரகல நீர்த் திட்டத்தில் 2 மணல் கழுவுதல் மற்றும் சல்லடை இயந்திரங்களின் கொள்வனவு மற்றும் நிறுவுதல்.
   - ஹிங்குரக்கொட பி.ச. இல் மின்னேரிய நகரில் சந்தைக் கட்டிடத்தின் நிர்மாணம்.
   - லங்காபுர பி.ச. இல் புலஸ்திகம வாராந்தச் சந்தையில் வர்த்தகக் கட்டிடத்தின் நிர்மாணம்.
2. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பில் மாகாண திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட CIDA பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து (தொலைபேசி: 025-2234728, தொலைநகல் - 025-2234738, மின்னஞ்சல்: ncplg2020@gmail.com) மேலதிக விபரங்களை பெறலாம்.
7. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.03.11 ஆம் திகதி தொடக்கம் 2024.04.01 ஆம் திகதி வரை அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
8. 2024.04.02ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபை கட்டிட வளாகம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்; தொடர்புடைய திட்டங்களுக்கான விலைமனு பிணை தொகை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | திட்டப் பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் நிர்மாணக் காலம் | CIDA தரம் மற்றும் நிபுணத்துவம் | விலை மனுக்களின் செல்லுபடி | விலைமனு பிணை தொகை மற்றும் செல்லுபடி | விலை மனுவுக்கு முந்திய சந்திப்பு திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | கஹடகஸ்திகிலியவில் பாலர் பாடசாலை நிர்மாணம். | 27.94மில். 135 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 30.07.2024 | 400,000.00 27.08.2024 | 20.03.2024 மற்றும் மு.ப. 10.00 | 10,000.00 |
| 02. | வலிகந்த பி.ச. இல் செவனபிட்டிய நீர்த் திட்டத்தின் மேம்பாடு. | 28.00 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் நீர் வழங்கல் மற்றும் கழிகான் | 119 நாட்கள் 30.07.2024 | 400,000.00 27.08.2024 | 19.03.2024 மற்றும் பி.ப. 3.30 | 10,000.00 |
| 03. | பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இபலோகம பி.ச. அலுவலகக் கட்டிடத்தின் 1ஆவது மாடியின் நிர்மாணம். | 19.31 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 250,000.00 16.07.2024 | 21.03.2024 மற்றும் பி.ப. 12.30 | 10,000.00 |
| 04. | கெகிராவ நகரில் பகல் பராமரிப்பு நிலையத்தின் நிர்மாணம். | 17.54 மில். 135 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 250,000.00 16.07.2024 | 21.03.2024 மற்றும் மு.ப. 10.30 | 10,000.00 |
| 05 | மிஹின்தலே மின்சார சபை வீதியின் மேம்பாடு. | 25.57 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் வீதி நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 350,000.00 16.07.2024 | 20.03.2024 மற்றும் மு.ப. 9.30 | 10,000.00 |
| 06 | கெபித்திகொல்லாவ வாராந்தச் சந்தையில் வர்த்தகக் கடையின் நிர்மாணம் (கட்டம் 01 மற்றும் கட்டம் 02). | 19.48 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 250,000.00 16.07.2024 | 20.03.2024 மற்றும் பி.ப. 2.30 | 10,000.00 |
| 07 | கல்நேவ வாராந்தச் சந்தையின் மேம்பாடு. | 21.24 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 300,000.00 16.07.2024 | 21.03.2024 மற்றும் பி.ப. 2.30 | 10,000.00 |
| 08 | பொலன்னறுவை மா.ச. இல் கல்லேல்ல SWMGT நிலையத்திற்கான 3 கடை அறைகளின் நிர்மாணம். | 9.48 மில். 90 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 150,000.00 16.07.2024 | 19.03.2024 மற்றும் மு.ப. 10.00 | 5,000.00 |
| 09 | நுவரகம பிரதேச கிழக்கு பி.ச. இல் ஜயபிர வரவேற்பு மண்டபத்தின் மேம்பாடு. | 12.78 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 200,000.00 16.07.2024 | 22.03.2024 மற்றும் மு.ப. 9.30 | 10,000.00 |
| 10 | நுவரகம பிரதேச கிழக்கு பி.ச. இல் நெலுபேவவில் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கான 3 அறைகளின் நிர்மாணம். | 6.91 மில். 90 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 100,000.00 16.07.2024 | 22.03.2024 மற்றும் மு.ப. 9.30 | 5,000.00 |
| 11 | இபலோகம பி.ச. இன் மிஹிலிய துருல பொதுப் பூங்காவின் மேம்பாடு. | 9.98 மில். 90 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 150,000.00 16.07.2024 | 21.03.2024 மற்றும் பி.ப. 11.30 | 5,000.00 |
| 12 | கல்நேவ பி.ச. இல் அவ்கன சபா உயன பொது பூங்காவின் மேம்பாடு. | 21.51 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 300,000.00 16.07.2024 | 21.03.2024 மற்றும் மு.ப. 2.30 | 10,000.00 |
| 13 | திம்புலகல பி.ச. இல் சிரிபுற மற்றும் நுவரகல நீர்த் திட்டத்தில் 2 மணல் கழுவுதல் மற்றும் சல்லடை இயந்திரங்களின் கொள்வனவு மற்றும் நிறுவுதல். | 19.83 மில். 120 நாட்கள் | பொருட்கள் | 66 நாட்கள் 07.06.2024 | 190,000.00 06.07.2024 | 19.03.2024 மற்றும் பி.ப. 2.00 | 10,000.00 |
| 14 | ஹிங்குரக்கொட பி.ச. இல் மின்னேரிய நகரில் சந்தைக் கட்டிடத்தின் நிர்மாணம். | 27.20 மில். 135 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 30.07.2024 | 400,000.00 27.08.2024 | 20.03.2024 மற்றும் பி.ப. 3.00 | 10,000.00 |
| 15 | லங்காபுர பி.ச. இல் புலஸ்திகம வாராந்தச் சந்தையில் வர்த்தகக் கட்டிடத்தின் நிர்மாணம். | 23.71 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 18.06.2024 | 350,000.00 16.07.2024 | 19.03.2024 மற்றும் பி.ப. 1.00 | 10,000.00 |

.................................

**தலைவர்,**
**மாகாண திட்டப் பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**மாகாண சபை கட்டிட வளாகம்,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அநுராதபுரம்**

---

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

## விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தித் திட்டம் (STHRDP)

### திட்ட அமுலாக்கல் பிரிவு

### தொழில்நுட்ப பீடம்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹின்தலே

**அலுவலக தொலைபேசி: +94252266228** **பிரதித் திட்ட பணிப்பாளர்: +94252266380**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| **கடன் இல. மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தித் திட்டம் |
| **ஒப்பந்த இலக்கங்கள் மற்றும் தலைப்பு :** | MOE/STHRD/RJ/CRG/R2-RJ2-1: இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்தில் Microgrid முன்னோடித் திட்டம் ஒன்றை செயற்படுத்த CRG/R2-RJ2 இன் கீழ் உபகரணங்கள் வழங்கலின் பெறுகை |
| | MOE/STHRD/RJ-E105: இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீட, உணவு தொழில்நுட்ப திணைக்களத்திற்கு உணவு தொழில்நுட்பத்திற்கான உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் பயிற்சியின் பெறுகை |
| **விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2024.04.08 அன்று 14:00 மணி (உள்ளூர் நேரம்) |

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தித் திட்டத்தை (STHRDP திட்டம்) செயற்படுத்துவதன் செலவை நோக்கி ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு, மேலுள்ள பெயரிடப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த நிதியின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுடைய மூல நாடுகளில் இருந்து விலைமனுதாரர்களுக்கு விலைக்கேட்புக்கு திறக்கப்பட்டுள்ளது.
2. மேலுள்ள விலைமனுக்களுக்காக ("பொருட்கள்") தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தித் திட்ட, பிரதித் திட்ட பணிப்பாளரின் சார்பில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் (கொள்வனவாளர்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. ஒரு தபால் உறை நடைமுறையாக - ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒற்றைக் கட்ட பொருட்களின் பெறுகைக்கு அமைய திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. விலைமனு ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட பின்வரும் முக்கிய தகைமைகளையுடைய தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரம் இந்த விலைக்கேட்பில் பங்கேற்கலாம்:

| **விலைமனுவின் தலைப்பு** | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் பிரதான வழங்குநராக குறைந்தது 2 ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (2021.01.01 தொடக்கம்) | கடந்த மூன்று ஆண்டு காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர் மூலம் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வு பின்வருமாறு. (2022/ 2023, 2021/ 2022, 2020/2021) |
|---|---|---|
| MOE/STHRD/RJ/CRG/R2-RJ2-1: இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்தில் Microgrid முன்னோடித் திட்டம் ஒன்றை செயற்படுத்த CRG/R2-RJ2 இன் கீழ் உபகரணங்கள் வழங்கலின் பெறுகை | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் 40 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது | பூர்த்தி செய்யப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர் மூலம் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவாக கணக்கிடப்பட்ட 83.00 மில்லியன் இலங்கை ரூபா. |
| MOE/STHRD/RJ-E105: இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீட, உணவு தொழில்நுட்ப திணைக்களத்திற்கு உணவு தொழில்நுட்பத்திற்கான உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் பயிற்சியின் பெறுகை | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கலின் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் Multymode Microplate Reader உருப்படி 1 இற்காக 12.0 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Ultrasonic Sonicator உருப்படி 2 இற்காக 2.50 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Meat mincer மற்றும் stuffer உருப்படி 3 இற்காக 1.0 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Can Seaming Machine உருப்படி 4 இற்காக 1.0 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Extruder உருப்படி 5 இற்காக 0.750 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Juice processer உருப்படி 6 இற்காக 0.750 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Pasteurizer உருப்படி 7 இற்காக 2.00 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது, Horizontal Gel Systems உருப்படி 8 இற்காக 0.750 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதது. | Multymode Microplate Reader உருப்படி 1 இற்காக 25.0 மில்லியன் இலங்கை ரூபா, Ultrasonic Sonicator உருப்படி 2 இற்காக 5.0 மில்லியன் இலங்கை ரூபா, Meat mincer மற்றும் stuffer உருப்படி 3 இற்காக 2.0 மில்லியன் இலங்கை ரூபா, Can Seaming Machine உருப்படி 4 இற்காக 2.0 மில்லியன் இலங்கை ரூபா, Extruder உருப்படி 5 இற்காக 1.50 மில்லியன் இலங்கை ரூபா, Juice processer உருப்படி 6 இற்காக 1.50 மில்லியன் இலங்கை ரூபா, Pasteurizer உருப்படி 7 இற்காக 4.00 மில்லியன் இலங்கை ரூபா, Horizontal Gel Systems உருப்படி 8 இற்காக 1.50 மில்லியன் இலங்கை ரூபா. |

5. மேலதிக விபரங்களை பெறுவதற்கு மற்றும் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க, பின்வருமாறு விலைமனுதாரர்கள் தொடர்புகொள்ளல் வேண்டும்:

   சிரேஷ்ட பெறுகை அதிகாரி, திட்ட அமுலாக்கல் பிரிவு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தித் திட்டம், தொழில்நுட்ப பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹின்தலே, சிப் குறிமுறை: 50300, இலங்கை

   தொலைபேசி: 0714477898, தொலைநகல்: 025 2266380, மின்னஞ்சல்: sporj-sthrd@mohe.gov.lk

   விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பின்வருமாறு அமையும் என்பதோடு இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும்படி ஆர்வமுடைய விலைமனுதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| விலைமனு தலைப்பு | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|
| MOE/STHRD/RJ/CRG/R2-RJ2-1 | 2024.03.18 அன்று மு.ப. 10.00 | மிஹின்தலே, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீட, சபை அறை |
| STHRD/RJ-E105 | 2024.03.19 அன்று மு.ப. 10.00 | |

6. மிஹின்தலே இலங்கை வங்கியில் பேணப்படும் 83804379 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்தல் அல்லது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக STHRDP திட்ட, பிரதித் திட்ட பணிப்பாளரின் பெயரில் ரொக்கப்பணம் அல்லது வங்கி வரைவு மூலம் விலைமனு இலக்கம் MOE/STHRD/RJ/CRG/R2-RJ2-1 இற்காக 15,000.00 இலங்கை ரூபா மற்றும் விலைமனு இலக்கம் STHRD/RJ-E105 இற்காக 10,000.00 இலங்கை ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடத்திற்கு மேலுள்ள விலைமனு ஆவணங்களுக்கா க கோரிக்கை விடுத்து மேலுள்ள முகவரிக்கு எழுதி தகுதியுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும். 2024.04.05 ஆம் திகதி 15.00 மணி வரை வார நாட்களில் ஆவணம்/கள் வழங்கப்படும். காணாமல்போன அல்லது தாமதித்து சமர்ப்பிப்பவற்றுக்கு பொறுப்பேற்கப்படாது.
7. விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றுடன் சேர்த்து உங்களது விலைமனுவை 2024.04.08 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**பிரதித் திட்ட பணிப்பாளர்,**
**திட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRDP திட்டம், தரைத் தளம்,**
**தொழில்நுட்ப பீடம்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹின்தலே, இலங்கை.**

பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு காணாமல்போன அல்லது தாமதித்து சமர்ப்பிப்பவற்றுக்கு பொறுப்பேற்கப்படாது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**
**மிஹின்தலே**
**திகதி: 2024.03.11**

# பங்களாதேஷ் அணி வீரருக்கு அபராதம்



இலங்கைக்கு எதிராக கடந்த சனிக்கிழமை (09) நடைபெற்ற மூன்றாவது டி20 சர்வதேச போட்டியின் போது ஐ.சி.சி. நடத்தை விதியை மீறிய பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் தௌஹீத் ஹ்ரிதோயுக்கு போட்டிக் கட்டணத்தில் 15 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் 28 ஓட்டங்களால் தோல்வி அடைந்த பங்களாதேஷ் அணி தொடரை 1–2 என இழந்தது.

பங்களாதேஷ் இன்னிங்ஸின் நான்காவது ஓவரில் ஹ்ரிதோய் ஆட்டமிழந்து அரங்கு திரும்பும்போது இலங்கை வீரர்கள் மீது கோபத்தை வெளியிட்டிருந்தார். தனது தவறை ஒப்புக்கொண்ட அவர் தண்டனையையும் ஏற்றுள்ளார். இதன்போது ஹ்ரிதோயுக்கு ஒரு தகுதியிழப்புப் புள்ளியும் சேர்க்கப்பட்டுள்ளது.

கள நடுவர்கள், மூன்று மற்றும் நான்காவது நடுவர்களே இது தொடர்பில் முறைப்பாடு செய்தனர்.

# யூசுப் கிண்ணம் சோண்டர்ஸ் வசம்

**பிரின்ஸ் குணசேகர**



இளம் கால்பந்து வீரர்களின் திறமையை வெளிக்கொண்டுவரும் நோக்கில் சிட்டி கால்பந்து லீக் மூன்றாவது முறையாக ஏற்பாடு செய்த 19 வயதுக்கு உட்பட்ட யூசுப் கிண்ண கால்பந்து தொடரில் சோண்டர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் சோண்டர்ஸ் இடையிலான இறுதிப் போட்டியில் சோண்டர்ஸ் அணி 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

கிண்ணத்தை வென்ற சோண்டர்ஸ் அணிக்கு ஒன்றரை இலட்சம் ரூபா மற்றும் இரண்டாம் இடம் பெற்ற கொழும்பு கால்பந்து கழகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

தொடரின் சிறந்த கோல் காப்பாளராக சோண்டர்ஸ் அணியின் பீ. கிஷோர் விருது வென்றதோடு, சிறந்த வீரராக கொழும்பு அணியின் உமர் சக்கீல் தெரிவானார். கொழும்பு–சோண்டர்ஸ் இடையிலான போட்டியில் 24 ஆவது நிமிடத்தில் மொஹமட் முபாசல் அபார கோல் ஒன்றை பெற்றதோடு, தொடர்ந்து இரு அணிகளாலும் கோல் புகுத்த முடியாமல்போனது. கொழும்பு கால்பந்து கழகத்திற்கு கோல் பெறும் 5 வாய்ப்புகள் தவறிப்போனதோடு, போட்டி முழுவதும் அதிஷ்டம் சோண்டர்ஸ் பக்கம் சுற்றியது.

அரையிறுதிப் போட்டிகளில் சம்பியன் கிண்ணம் வென்றிருந்த ஜாவாலேன் அணி சோண்டர்ஸிடம் 4–0 என்ற கோல்களாலும், விக்டரி அணி கொழும்பு கழகத்திடம் 6–1 என்ற கோல்களாலும் தோல்வியை சந்தித்தன.

# சம்பியனானது ஹிஜ்றா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற பிரதேச மட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்றா அணி சம்பியனாக தெரிவானது. அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (09) நடைபெற்ற தொடரின் இறுதிப்போட்டியில் புளட்ஸ் கழகத்தை எதிர்கொண்ட ஹிஜ்றா அணி 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# அல்–அறபா வெற்றி

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



பாலமுனை அல்–அறபா மற்றும் அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் அல்–அறபா அணி வெற்றியீட்டியது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (08) நடைபெற்ற இந்தப் போட்டியில் அல்–அறபா 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. அணித் தலைவர் எம்.எஸ். சஹான் அஹமட் இரு கோல்களையும் புகுத்தினார்.

# மகளிர் இளையோர் முக்கோண தொடர் இலங்கையில்




இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் முக்கோண தொடரில் விளையாடவுள்ளது.

இந்த இளையோர் அணிகள் எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் டி20 மற்றும் ஒருநாள் முக்கோணத் தொடர்களில் ஆடவிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இந்தப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை மற்றும் காலியில் நடைபெறவிருப்பதோடு இதில் ஒவ்வொரு அணியும் தலா நான்கு டி20 மற்றும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் ஆடும். இதில் டி20 தொடர் மார்ச் 24 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதோடு ஒருநாள் போட்டிகள் ஏப்ரல் 24 ஆம் திகதி ஆரம்பமாகும். இந்த இரு தொடர்களிலும் அதிக புள்ளிகளை பெறும் அணி அடிப்படையில் வெற்றியாளர் தேர்வு செய்யப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

# ஏழு ஒஸ்கார்களை அள்ளிய 'ஓபன்ஹைமர்' திரைப்படம்



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 2024ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருது விழாவில் 'ஓபன்ஹைமர்' திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்படம் ஏழு பிரிவுகளில் ஒஸ்கர் விருதுகளை வென்றுள்ளது.

சிறந்த படம், சிறந்த இயக்குநர் (கிறிஸ்டோபர் நோலன்), சிறந்த நடிகர் (சிலியன் மர்பி), சிறந்த துணை நடிகர் (ரொபர்ட் டவுனி ஜூனியர்), சிறந்த ஒளிப்பதிவாளர் (ஹாய்ட் வான் ஹோய்டெமா), சிறந்த திரைப்பட எடிட்டிங் (ஜெனிபர் லெம்), சிறந்த இசை, சிறந்த படத்தொகுப்பு ஆகியவற்றுக்கு ஓபன்ஹெய்மர் பரிந்துரைக்கப்பட்டு விருதும் வென்றுள்ளது.

கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய இந்தப் படம் இந்த ஆண்டுக்கான ஒஸ்கர் விருதுகளில் மொத்தம் 13 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டது. ஓபன்ஹைமர் படம் ஏழு பிரிவுகளிலும், மற்ற படங்கள் ஆறு பிரிவுகளிலும் விருதுகளை வென்றன.

இதற்கு முன்னர் ஒஸ்கார் விருதுகளில் கிறிஸ்டோபர் நோலன் 8 முறை பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

ஆனால், இப்போதுதான் முதல் முறையாக சிறந்த இயக்குனருக்கான விருதையும், சிறந்த படத்திற்கான விருதையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், சிறந்த நடிகைக்கான தனது இரண்டாவது ஒஸ்கார் விருதைப் எம்மா ஸ்டோன் 'புவர் திங்ஸ்' திரைப்படத்தின் மூலம் வென்றார்.

# இந்தோனேசிய விமானத்தில் இரு விமானிகளும் உறக்கம்



இந்தோனேசியாவில் உள்ளூர் பயணிகள் விமானம் ஒன்று பறந்து கொண்டிருக்கும் நேரம் இரு விமானிகளும் உறங்கியது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 25 ஆம் திகதி சுலவெசியில் இருந்து தலைநகர் ஜகார்த்தாவை நோக்கி பயணித்த விமானத்திலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனை அடுத்து அந்த இரு விமானிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஏர்பஸ் ஏ320 விமானம் சற்று திசைமாறி பயணித்தபோதும் விமானத்தில் இருந்த 153 பயணிகள் மற்றும் சிப்பந்திகள் பாதுகாப்பான தரையிறங்கியுள்ளனர்.

32 வயதான விமானி விமானம் புறப்பட்டு அரைமணி நேரத்தில் தனது துணை விமானிக்கு விமானத்தின் கட்டுப்பாட்டை வழங்கி விட்டு உறக்கத்திற்கு சென்றுள்ளார். அதற்கு 28 வயதான துணை விமானி இணங்கியபோதும் அவரும் உறக்கத்திற்கு சென்றுள்ளார். தனது மனைவி குழந்தை பிரசவித்த நிலையில் ஒரு மாதமான அந்த குழந்தையை பராமரிப்பதில் மனைவிக்கு உதவிய நிலையிலேயே துணை விமானி எதிர்பாராத வகையில் உறக்கத்திற்கு சென்றிருப்பதாக உள்ளூர் செய்திகள் கூறுகின்றன. இந்நிலையில் விமானக் கட்டுப்பாட்டகம் விமானத்துடன் தொடர்புகொள்ள முயன்றபோதும் 28 நிமிடங்களாக தொடர்புகொள்ள முடியாமல் போயுள்ளது.

இந்நிலையில் விழித்துக்கொண்ட விமானி துணை விமானியும் உறங்கி இருப்பதை அறிந்துகொண்டுள்ளார். அப்போது விமானம் பயணப்பாதையில் இருந்து சற்று விலகி இருப்பதையும் அவர் கண்டுள்ளார்.

தொடர்ந்து ஜகார்த்தா கட்டுப்பாட்டகத்துடன் தொடர்புகொண்ட விமானி, விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கியுள்ளார்.

இந்த சம்பவத்தின் போது உறங்கிய இரு விமானிகளின் பெயர் மற்றும் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும், இருவருக்கும் முறையான ஓய்வு வழங்காமல் பணி செய்ய வைத்தது விசாரணையில் தெரியவந்தது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் போர் நிறுத்தம் இன்றி ரமழான் ஆரம்பம்

## தொடரும் தாக்குதலில் மேலும் 67 பேர் பலி

போர் நிறுத்த முயற்சிகள் ஸ்தம்பித்துள்ள நிலையில், இஸ்ரேலிய தாக்குதல் மற்றும் முற்றுகைக்கு மத்தியில் காசாவில் நேற்று (11) புனித ரமழான் ஆரம்பமானதோடு ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிகளில் கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலேயே இம்முறை நோன்பு ஆரம்பமாகியுள்ளது.

ரமழான் மாதத்திற்கு முன்னர் ஆறு வாரங்கள் கொண்ட போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சிகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் முன்னெடுக்கப்பட்டபோதும் அவை வெற்றி அளிக்கவில்லை. இதற்கு ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ரமழானுக்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்; தொடர்ந்து நீடித்தது. காசா நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று இடம்பெற்ற வான் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். அபூ ஷமலாவுக்கு சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பெரும்பாலும் சிறுவர்கள் மற்றும் பெண்களே கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

மறுபுறம் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகரில் இடம்பெற்ற இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் மேலும் மூவர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிறு இரவு காசா நகரில் இஸ்ரேலிய தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்ட அஷூர் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டில் இருந்து சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 67 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 106 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 31,112 ஆக அதிகரித்திப்பதோடு மேலும் 72,760 பேர் காயமடைந்துள்ளனர்.

### 'ஐந்து மாதமாக நோன்பு'

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தில் இஸ்ரேலின் கடுமையான கெடுபிடிக்கு மத்தியிலும் காசா பகுதியில் இஸ்ரேலின் தாக்குதல்கள் மற்றும் பட்டினிக்கு மத்தியிலும் பலஸ்தீனர்கள் நேற்று புனித ரமழான் மாதத்தை ஆரம்பித்தனர்.

ஜெரூசலத்தில் உள்ள பழைய நகரின் குறுகலான வீதிகளில் ஆயிரக்கணக்கான பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், முஸ்லிம்களின் புனிதத் தலங்களில் ஒன்றான அல் அக்ஸா பள்ளிவாசலில் மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்தப் பள்ளிவாசலுக்கு ரமழான் மாதத்தில் கட்டுப்பாடு விதிப்பது பற்றி எச்சரித்திருந்த நிலையில் கடந்த ஆண்டு அளவு எண்ணிக்கையான வழிபாட்டாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்திருந்தார்.



'இது எமது பள்ளிவாசல் என்பதோடு நாம் அதனை பாதுகாக்க வேண்டும்' என்று ஜெரூசலம் வக்ப் சபை பணிப்பாளர் நாயகம் அஸாத் அல் காதிப் தெரிவித்தார். 'அமைதியாகவும் பாதுகாப்பாகவும் பெரும் எண்ணிக்கையானவர்கள் நுழைய முடியுமாக இந்த பள்ளிவாசலில் முஸ்லிம்களின் இருப்பை நாம் பாதுகாக்க வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

வழக்கமான ரமழானை வரவேற்பதற்கு பழைய நகரில் அலங்காரங்கள் செய்யப்படுகின்றபோதும் இம்முறை அவை காணப்படவில்லை. காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படைகள் அல்லது குடியேற்றவாசிகளின் தாக்குதல்களில் சுமார் 400 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தெற்கு நகரான ரபாவின் பிளாஸ்டிக் கூடாரங்களில் சுருக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறை மற்றும் பட்டினிக்கு மத்தியிலேயே இம்முறை ரமழான் ஆரம்பமாகியுள்ளது.

'நாம் ஐந்து மாதங்களாக நோன்பு இருப்பதால் ரமழானை வரவேற்பதற்கு எந்த தயார்படுத்தலையும் செய்யவில்லை' என்று ஐந்து வயது குழந்தையின் தாயான மாஹா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

'இங்கே உணவு இல்லை, சில பொதியிடப்பட்ட உணவுகளே இருப்பதோடு அரிசி மற்றும் பெரும்பாலான உணவுப் பொருட்கள் நம்ப முடியாத அதிக விலையில் விற்கப்படுகின்றன' என்று ரபாவில் இருந்து சாட் செயலி வழியாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு அவர் தெரிவித்தார்.

இம்முறை ரமழான் மாதம் வலி நிறைந்த தருணத்தில் வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது ரமழான் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கொடூரமான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும், பாதுகாப்பான மனிதாபிமான மற்றும் நிவாரண வழித்தடங்களை நிறுவுவதும் சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும் என்று சவூதி அரேபிய மன்னர் சல்மான் வெளியிட்ட ரமழான் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா தலைவர் தனது ரமழான் செய்தியில், காசாவில் பயங்கரத்தை சந்தித்துள்ள அனைவருக்கு ஆதரவு மற்றும் ஒருமைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் காசாவுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிய கப்பல் ஒன்று புறப்படுவதற்கு தயாராக தொடர்ந்து சைப்ரஸில் காத்துள்ளது. ஓபன் ஆம்ஸ் என்ற இந்தக் கப்பல் அதே பெயருடைய ஸ்பெயின் தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமானதாகும்.

200 தொன் உணவுப் பொருட்களை ஏற்றிய இந்தக் கப்பல் புறப்பட்டு இரண்டு நாட்களில் காசாவில் குறிப்பிடப்படாத கடற்கரை பகுதியை அடைய திட்டமிட்டுள்ளது. மறுபுறம் உதவி விநியோகத்திற்காக காசா காரையில் தற்காலி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான பணியை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

காசாவில் பட்டினிச்சாவு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில் அங்கு பஞ்சம் ஒன்று ஏற்படும் அச்சுறுத்தல் பற்றி ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### போர் நிறுத்தப் பேச்சு

ரமழான் மாதத்தை அமைதியாக கழிப்பது மற்றும் காசாவில் தொடர்ந்து பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவித்து அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருந்து பலஸ்தீன கைதிகளை விடுவிக்கும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை எட்டும் பேச்சுவார்த்தை முன்னேற்றம் இன்றி ஸ்தம்பித்துள்ளது.

மேலும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டபோதும் அதற்கான திகதி மற்றும் விபரங்கள் வெளியாகவில்லை.

தற்போது கட்டாரில் வசித்து வரும் ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே வெளியிட்ட தொலைக்காட்சி உரை ஒன்றில் கூறியிருப்பதாவது, 'உடன்படிக்கை ஒன்றை எட்ட முடியாததற்கான பொறுப்பு ஆக்கிரமிப்பாளர் (இஸ்ரேல்) உடையது என்பதை நான் தெளிவாகக் கூறிகொள்கிறேன். எவ்வாறாயினும் நாம் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து மேற்கொள்வோம்' என்றார்.

இந்நிலையில் ரமழானின் முதல் பாதியில், குறிப்பாக முதல் பத்து நாட்களுக்குள் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு இராஜதந்திர அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்த பேச்சுவார்த்தையுடன் தொடர்புபட்ட வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.